வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
விரமலர்




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 236 | பக்கங்கள் : 16

### கொழும்பு தேசிய வைத்தியசாலையின்

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் ரணில்!

## வைத்தியர்களின் பரிந்துரையை அடுத்து

கொழும்பு, ஓகஸ்ட் 24

**கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.**



உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் மிகுந்த சோர்வு காரணமாக ரணில் விக்கிரமசிங்க அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றுப் பிற்பகல் அனுமதிக்கப்பட்டார்.

அவரது நோய் நிலையைப் பரிசோதித்த சிறைச்சாலை வைத்தியர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுமாறு பரிந்துரைத்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன் தினம் இரவு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 15

## ரணிலுக்கு மூன்று வேளையும் வீட்டு உணவு வழங்க அனுமதி

கொழும்பு, ஓக. 24

சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது வீட்டில் இருந்து மூன்று வேளை உணவு மற்றும் பானங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் குடும்ப உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, அவரது 15

## ரணிலுக்காக ஒன்றுகூடும் முன்னாள் ஜனாதிபதிகள்!

கொழும்பு, ஓக. 24

தற்போது சிறையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பாக ஏனைய முன்னாள் ஜனாதிபதிகள் இன்று கொழும்பில் விசேட ஊடக சந்திப்பை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த ஊடக சந்திப்பில் பங்கேற்க உள்ளனர். 15

## சட்டத்தின் இறுதி முடிவு 3ஆம் தரப்பால் கணிக்கப்படுவது மிகப் பாரதூரமானது!

### சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 24

சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக சமூக ஊடகத்தில் ஒருவர் கணிப்புகளை வெளியிட்டு நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டத்தில் குறிப்பிடப்படாத மூன்றாம் தரப்பினரால் சட்டத்தின் இறுதி முடிவை கணிக்க முடியாது. இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை எனவும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிடுவதற்காக அவர் 15

## எதிரணியைச் சிறை வைத்தால் பெரும் விலை செலுத்த நேரிடும்!

### அரசை எச்சரிக்கிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஓக. 24

எதிரணியில் உள்ளவர்களை சிறையில் அடைக்கலாம் என கனவு காண்பார்களாயின் இந்த தவறுகளுக்கான விலையைச் செலுத்த வேண்டிய நாள் வெகு தூரத்தில் இல்லை என பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று 15

## மாங்குளத்தில் காயங்களுடன் பெண்ணின் சடலம்!

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பாலைப்பாணி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் வீட்டில் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

70 வயதான மூதாட்டி வீட்டில் சடலமாக கிடப்பதாக கிராமத்தவர்களால் நேற்றுமுன்தினம் மாலை மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு நேற்று காலை கிளிநொச்சி 15



## பக்தர்களின் அரோகரா முழங்க சந்நிதியானுக்கு கொடி ஏறியது

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 24

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

சந்நிதி ஆலயத்தில் நேற்று பிற்பகல் 1.19 மணிக்கு கொடியேற்றப்பட்டு திருவிழா ஆரம்பமானது.

அன்னதானக் கந்தன் என்று அழைக்கப்படும் சந்நிதியானின் திருவிழாவில் அதிகளவான 15

## அரச வைத்திய அதிகாரிகள் நாளை பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக. 24

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாளை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாடு தழுவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை காலை 08 மணிக்கு பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பமாகும் என நேற்று சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வைத்திய அதிகாரிகளின் இடமாற்ற 15

## வடமராட்சி கிழக்கில் மீனவர் படுகொலை!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் வாளால் வெட்டி நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சுண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள உடப்பு பிரதேசத்தை சேர்ந்த நபருக்கு சொந்தமான வாடியில் நேற்றுமுன்தினம் இரவு இரு மீனவர்களுக்கு 15

## 'நீதியின் ஓலம்' செம்மணியில் ஆரம்பம்!




- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 24

செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் சர்வதேச நீதி கோரி ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து 'நீதியின் ஓலம்' கையொப்பப் போராட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் - செம்மணியில் முன்னெடுக்கப்பட்டது. 15

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிகளை மறக்கவில்லை

## அவற்றை நிச்சயம் நிறைவேற்றுவோம் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 24

**தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் மறக்கவில்லை. அவற்றை நிச்சயம் நிறைவேற்றுவோம். காணி விடுவிப்பு நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

“யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துவிட்டன. போரால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆறவில்லை. அதனால் தான் இப்படியான பிரேரணைகள் வருகின்றன. அத்துடன், வடக்கில் புலம்பெயர்வுகளைத் தடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் யாழ்ப்பாணம் மக்கள் இல்லாத பகுதியாக மாறக்கூடும்.

வடக்கில் மிக வேமாக அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று பிரதான தொழில் பேட்டைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. அதன் பின்னர் சிறந்த தொழில் பிரதேசமாக வடக்கு மாறும். எமது பகுதியை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை குறையும். எமது மக்கள் மத்தியிலும் நம்பிக்கை ஏற்படும். தமிழ் மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற புலம்பெயர் தமிழர்கள் இன்று சுதந்திரமாக வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. எவ்வித பாதுகாப்பு கெடுபிடிகளும் இல்லை. இதனால் இங்கேயே இருந்துவிடலாம் என எண்ணுகின்றனர். முதலீட்டு வாய்ப்புகள் பற்றி ஆராய்கின்றனர்.

எமது ஆட்சி வந்து 10 மாதங்கள் கடந்துவிட்டன. தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நாம் மறக்கவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவோம்.

காணிகள் விடுவிக்கப் படும் என்பது பிரதான உறுதிமொழி. தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் படிப்படியாக கூடிய சீக்கிரம் விடுவிக்கப்படும்.

காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் ஆகிய பிரச்னை பற்றியும் நடவடிக்கை எடுக்கப்படும்”.- என்றார். (எ)

# யாழில் இந்திய முதலீட்டாளர்களின் காணிக்குத்தகை குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஒக. 24

சுற்றுலாத்துறையில் இந்திய முதலீட்டாளர்களின் காணிக் குத்தகை செயல்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இந்திய முதலீட்டாளர்கள் இலங்கையுடன் இணைந்த வகையில் யாழ்ப்பாணம் பகுதிகளில் ஆன்மீகம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலாத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதில் காணிக்குத்தகை ஏற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதில், இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையின் முதலீட்டுப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், இந்திய முதலீட்டாளர் குழு, கரையோர வளங்கள் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவப் பிரிவின் பொறியியலாளர் , மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மருதங்கேணி பிரதேச செயலாளர், பருத்தித் துறை உதவி பிரதேச செயலாளர், சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத் தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# உணவகங்களுக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 24

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் உடல் நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெற்றிலை மென்ற வண்ணம் உணவை கையாண்டமை தொடர்பாக முகாமையாளர் மற்றும் உணவு கையாளுபவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் 40 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

மேலும், பருத்தித்துறை நகர்ப்புறத்தில் அமைந்துள்ள மீன் சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் போது வெற்றிலை மென்று பொது இடத்தில் உமிழ்ந்தவருக்கு 5000 ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட் டது.

அத்தோடு, வல்வெட்டித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக வல்வெட்டித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் உடல் நலத்தகுதியை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, உணவகத்தில் கடமை புரியும் ஊழியர்கள், தனிநபர் சுகாதாரம் பேணாமை, இலையான் பெருக இடமளித்தமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்புக்கும் ஒரே நீரை பயன்படுத்தியமை, உணவகத்தை வதிவிடமாக பயன்படுத்தியமை, போன்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த நிலையில் 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (எ-03)

# சிறுவர் உரிமைகளை பாதுகாக்கக் கோரி முல்லைத்தீவில் விழிப்புணர்வு நடைபவனி

முல்லைத்தீவு, ஒக. 24

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க கோரி

முல்லைத்தீவு, முத்தையன் கட்டு - ஜீவநகர் கிராமத்தில் பொது நோக்கு மண்டபத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு “நாம் சிறுவர் எம்மை காப்பீர்” எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு பேரணியை முத்தையன்கட்டுகுளம் கிராம உத்தியோகத்தர் பவிதா ஆரம்பித்து வைத்தார்.




சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை கொடு, சிறுவர்களைப் பாதுகாப்போம், சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு மன்னிப்பு இல்லை, குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்துக்காக நாம் நமது நிகழ்காலத்தை தியாகம் செய்வோம், அமர்த்தாதே அமர்த்தாதே சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே, சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ளதும் பாதுகாப்பு மிக்கதுமான சூழலொன்றை கட்டியெழுப்புவோம், வன்முறைகளில் இருந்து சிறுவர்களை நாம் பாதுகாப்போம் போன்ற பல்வேறு பதாகைகளுடன் விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது. (எ)

# “அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து போராடுவோம்”

கொழும்பு, ஒக. 24

நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஜனநாயக மீறல்களையும் அரசியல் பழிவாங்கல்களையும் இனியும் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை எனவும் சகல கட்சிகளுடனும் இணைந்து ஜனநாயக போராட்டத்தை ஆரம்பிப்போம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு தனிப்பட்ட பயணம் செய்வதற்காக அரச நிதியை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக மருத்துவ ஆலோசனையின் பேரில் ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று சனிக்கிழமை கொழும்பில் அவசர ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர். இதன் போதே மேற்கண்டவாறு கூறினர். (எ)

# வெட்டு காயங்களுடன் பெண் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஒக. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலைப்பாணி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் வீட்டில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் பாலைப்பாணி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த இராமசாமி ராமாயி எனும் 70 வயதான மூதாட்டி வீட்டில் சடலமாக கிடப்பதாக கிராமத்தவர்களால் நேற்று முன்தினம் மாலை மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சடலத்தை நீதிபதி பார்வையிட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மூதாட்டியிடமிருந்து நகை உள்ளிட்ட பொருட்களை திருடுவதற்காக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நிபந்தனையின்றி நீக்கப்பட வேண்டும்

## சிறீநேசன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

**பயங்கரவாத தடைச்சட்டம் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக நீக்கப்பட வேண்டும். இந்த சட்டம் இலங்கை அரசுக்கு கேவலத்தை, அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.**

இது ஜனநாயக நாடா என்று கேள்வியெழுப்படுகிறது. இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் தூண்டியுள்ளது. அத்துடன் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாட பயங்கரவாத தடைச்சட்டம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அதன் பெருமையை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்களையும் ஏனையவர்களையும் குற்றவாளிகளாக்கும் சட்டமாகவே பயங்கரவாத தடைச்சட்டம் காணப்படுகிறது. கடத்தல், காணாமலாக்குதல், மனிதப் புதைகுழிகளில் புதைத்தல் போன்ற கொடூரச் செயல்களுக்கு இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் உதவியுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு கொடூர சித்திரவதைகள் வழங்கப்பட்டுள்ளன. தலைகீழாக தொங்கவிடப்பட்டு, செத்தல் மிளகாயை நெருப்பில் போட்டு வெளிவரும் புகையை சுவாசிக்க செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக குட்டிமணி, ஜெகன், தங்கதுரை மற்றும் நடேசன் ஆகியோர் நீதிமன்றத்துக்கு குறிப்பிட்டுள்ளனர்.

கொடூர சித்திரவதைகள் ஊடாக பெற்றுக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலம் ஊடாக பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளன. அப்பாவி இளைஞர்கள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பல சித்திரவதைகள் அங்கு இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கு சாட்சியங்களாக பலர் இன்றும் வாழ்கிறார்கள்.

அரசாங்கத்தின் பிரதான மூன்று உறுப்பினர்கள் கடந்த காலங்களில் எதிர்க்கட்சியாக இருக்கும் போது பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று எம்முடன் இணைந்து குரல் கொடுத்தார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி அதற்கு பதிலாக கொண்டு வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் பயங்கரமானது என்றும் குறிப்பிட்டார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரிலான சட்டங்கள் இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்றே குறிப்பிட வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் இலங்கை குடியாட்சி நாடா என்று கேள்வியெழுப்பப்படும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினோம் என்ற பெருமையை பெற்றுக்கொள்ளுங்கள்".- என்றார். (எ)

# தொல்பொருள் திணைக்களத்தால் மக்களின் காணிகள் அபகரிப்பு

## இது பாரிய மனித உரிமைமீறல்

கொழும்பு, ஓக. 24

இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் இடம்பெறும் சித்திரவதைகள் தொடர்பில் கடந்த காலங்களில் பல விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. வன்னி மாவட்டத்தில் காணி அபகரிப்பு தீவிரமடைந்துள்ளது. தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம் ஆகியவை மக்களின் காணிகளை அபகரித்துள்ளன. இது பாரிய தொரு மனித உரிமை மீறலாகும். இவ்வாறான செயல்பாடுகளை உடன் நிறுத்துங்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை வழங்குங்கள். கடந்த கால தவறுகளை அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இந்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அடிப்படை உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன -என்றார். (எ)

# "நாட்டிற்காகவே செயல்பட்டேன்"

கொழும்பு, ஓக. 24

நான் தனிப்பட்ட காரணங்களுக்காக அல்ல, நாட்டிற்காகவே செயல்பட்டேன் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்படுவதற்கு முன்பு கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம், ரணில் விக்கிரமசிங்கவின் இந்த குரல் பதிவை ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

"நான் எப்போதும் நாட்டிற்காகவே உழைத்திருக்கிறேன். நான் தனிப்பட்ட காரணங்களுக்காக உழைத்ததில்லை. இந்த ஆட்சியின் உண்மை இப்போது வெளிவருகிறது. எல்லா இடங்களிலும் நடைபெறும் இது போன்ற அரசியல் நடவடிக்கை களை நான் ஏற்றுக் கொள்வதில்லை"- என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (எ)

# பிரிவினைவாதங்களை ஒழித்து சமத்துவத்தை ஏற்படுத்த முயற்சி


## அமைச்சர் சரோஜா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 24

பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்யும் அனைத்து இன, மத மக்களுக்கும் அதன் பிரதிபலன்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கான வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து பிரிவினைவாதங்களையும் இல்லாதொழித்து சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டில் மனித உரிமையை பாதுகாக்க முடியும் என அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

பாராளுமன்றில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நாம் செல்லும்போது எமது நாட்டில் எதிர்நோக்குகின்ற சவால்கள், தீர்மானங்கள் தொடர்பில் ஒரு நாடு என்ற வகையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பேதம் எதுவுமின்றி ஒன்றாக ஆலோசித்து சரியான தீர்வுகளை, முக்கிய விடயங்களை அங்கு பேச வேண்டிய



கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஒரு நாட்டின் நீடித்து நிலைக்கும் அமைதிக்கு அனைத்துக்களுக்கும் சமமான வாய்ப்பு, நீதி, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன கட்டாயத் தேவை என்பதை நாம் முழுமையாக நம்புகின்றோம்.

இந்த சவால்களை எதிர்கொள்வதன் மூலமே ஒரு உண்மையான ஜனநாயக சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை முழுமையாக நம்புகின்ற ஓர் அரசியல் கட்சியே எமது கட்சி.

மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் தொடர்பில் நாம் பேசும் போது அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சிந்திக்கும்போது முக்கியமாக பொருளாதார அபிவிருத்தி பற்றி பேச வேண்டியுள்ளது"- என்றார். (எ)

# வடக்கு மக்களின் ஆணையை ஏன் நாம் இல்லாமல் செய்ய வேண்டும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி

கொழும்பு, ஓக. 24

வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் அதிகளவில் வாக்களித்து தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்துள்ளனர். அந்த மக்களின் ஆணையை ஏன் நாங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். வடக்கின் அபிவிருத்திக் காக நிதியை ஒதுக்கியுள்ளோம் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நல்லிணக்கமும் அபிவிருத்தியும் நாணயங்களின் இரு பக்கங்களைப் போன்றது. இதன்படி, செயல்படுவோம். ஒரு வருடத்துக்கான பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதி வடக்கில் இருந்தே அபிவிருத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பார் என்றும் அவர் கூறினார்.

யுத்த காலத்தை போன்று யுத்தத்தின் பின்னரான காலத்திலும் தமிழ் மக்கள் இனவாதங்களுக்கு முகம்கொடுத்தனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணில், ராஜபக்ஷக்களை விடவும் மோசமானதா? அரசியல் ரீதியில் அழிந்துகொண்டு போகும் சவால்களுக்கு மத்தியில் இதுவரை காலம் தள்ளப்படாத இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளனர். வேண்டுமென்றால் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை தருகின்றோம். இனவாத தீனியை தேடிப்போக வேண்டாம். மாற்றங்களை பாருங்கள். வடக்கு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு முன்னுரிமை யளித்துள்ளோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் அரசாங்கத்தின் செயல்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கம் தொடர்பான பல்வேறு மாற்றங்கள் தொடர்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனை ஏன் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் காணவில்லை.

குறைந்தது மனித உரிமைகள் ஆணையாளர் காணும் முன்னேற்றத்தையாவது காணுங்கள். வடக்கு மற்றும் கிழக்கில் இறந்த உறவினர்களை நினைவுகூரும் உரிமையை வழங்கியுள்ளோம். இதனை மாற்றமாக பார்க்கவில்லை. அத்துடன் 20 வருடங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அது மாற்றமில்லையா? இவர்கள் யுத்தத்தை விடவும் சமாதானம், நல்லிணக்கத்துக்கு பயப்படுகின்றனர்.

மிகத் தெளிவான அரசியல் இன்னும் இருக்கும். நாட்டில் ஒருபக்கத்தை போன்று மறுபக்கமும் உருவாகும். நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். நாங்கள் அரசாங்கம் என்ற ரீதியில் தமிழ், முஸ்லிம், சிங்களம் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய அரசாங்கத்தையே எதிர்பார்க்கின் றோம். ஆகவே நீங்களும் மாறுங்கள்". என்றார். (எ)

# பராமரிப்பு பணிகளால் ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஓக. 24

கரையோர ரயில் பாதையில் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் காரணமாக நேற்று முதல் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடண்டுவ மற்றும் பூசா ரயில் நிலையங்களுக்கு இடையேயான பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே பொது மேலாளர் ரவீந்திர பத்மபிரியா தெரிவித்தார்.

இதன்படி, ஞாயிற்றுக்கிழமை காலி ரயில் நிலையத்தி லிருந்து அதிகாலை 05:15 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்பட திட்டமிடப் பட்டுள்ள ரயில் சேவையும் மருதானை ரயில் நிலையத் திலிருந்து நண்பகல் 12: 10 மணிக்கு காலிக்கு புறப்படும் ரயில் சேவையும் இரத்து செய் யப்பட்டுள்ளது.

மேலும், காலி ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 05: 00 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்பட திட்டமிடப் பட்டுள்ள 'சமுத்ரா தேவி' ரயில் சுமார் ஒரு மணி நேரம் தாமதமாகும்.காலி ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 04:10 மணிக்கு கொழும்பு கோட்டைக்கு புறப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறும்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி

கொழும்பு, ஓக. 24

**தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பல பிரச்னைகள் உள்ளன என்பதை ஏற்கிறோம். தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம். ஐக்கிய நாடுகள் சபை எங்களின் சர்வதேச நண்பன். அதன் உதவிகள் எங்களுக்கு எப்போதும் தேவையானது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு செவிமெடுப்பதில்லை என்பது தவறான கருத்தாகும். தேசிய மக்கள் சக்தி அவ்வாறு நடந்துகொள்வதில்லை. நாங்கள் இனங்கள், பாலினங்கள் என எது தொடர்பிலும் பார்ப்பதில்லை. சகலர் தொடர்பிலும் அவதானம் செலுத்துகின்றோம். வடக்கு மக்கள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஆனால், வடக்கு அரசியல்வாதிகள் அச்சமடைவது ஏன் என்று தெரியவில்லை.

வடக்கு, கிழக்கு தென் பகுதி மக்களின் சகல பிரச்னைகளையும் உடனே எங்களால் தீர்க்க முடியாது. ஆனால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். எங்களை தூற்றக்கூடாது. எங்களுக்கு நான்கு வருடங்கள் உள்ளன. நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

மனிதர்களின் மனங்களிலேயே யுத்தம் ஆரம்பிக்கின்றது. மனிதர்களின் மனப்பான்மையிலேயே முறுகல்கள் ஏற்படுகின்றன. இதனால், சமாதானமும் அந்த மக்களின் மனங்களில் இருந்தே வரவேண்டும். மீண்டும் நாடு பாதாளத்துக்குள் தள்ளப்படக்கூடாது. நாங்கள் சில முன்னேற்றங்களை கண்டுள்ளோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. அதன் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

சர்வதேச ரீதியில் பயங்கரவாத வரைவிலக்கணத்துடன் உள்ளடங்கலாக அதனை மாற்றியமைக்கவுள்ளோம்.

இதேவேளை நீண்டகால சிறைக்கைதிகள் உள்ளனர். இதுவொரு பிரச்னை என்று தெரியும். இதனால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக சிறையில் வாழ்பவர்கள் தொடர்பில் இந்தக் குழு ஆராயும். இது தொடர்பான அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

எவ்வாறாயினும் இனவாத அரசியலை நாங்கள் வெறுக்கின்றோம். எந்த சமூகத்துக்கும் பாதிப் பில்லாதவாறே எந்தவித திருத் தங்களையும் மேற்கொள்கின்றோம். அடுத்த வருடங்களில் குறிப்பிட்ட மாற்றங்களை காணலாம்.

இதேவேளை நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கரிசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். முன்னைய அரசாங்கங்கள் அதனை செய்யாமல் விட்டுச் சென்றுள்ளன. நாங்கள் அதனை நிறைவேற்றுவோம்".- என்றார். (எ)

# ரணில் விக்கிரமசிங்க விரைவில் வீடுதிரும்புவார்

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட நிலையில், உள்ளூர் அரசியல்வாதிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட், ரணில் விக்கிரமசிங்க விரைவில் வீடு திரும்புவார் என தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ரணில் விக்கிரமசிங்க விரைவில் வீடு திரும்புவார் என ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்"- எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கைது குறித்து கருத்து தெரிவித்த பல அரசியல் தலைவர்களில் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டும் ஒருவராவார்.

ரணில் விக்கிரமசிங்க இலங்கை ஜனாதிபதியாக இருந்தபோது, நஷீட் அவருக்கு ஆலோசகராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக இருந்தபோது அரசாங்க நிதியை முறை கேடாகப் பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)

# இ.போ.ச. பஸ் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஒருவர் படுகாயம்


நுவரெலியா, ஓக. 24

நுவரெலியாவில் வலப்பனை - நில்தண்டஹின்ன வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# செம்மணி அநியாயங்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்

## ரிஷாத் எம். பி. சபையில் வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 24

செம்மணியில் இடம்பெற்றது பாரிய அநியாயமாகும். அதனை யார் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். அதே போன்று ஹஜ் கடமையை செய்துவிட்டு திரும்பிய மக்களின் உடல்கள் எங்கே புதைக் கப்பட்டன என தெரியாமல் குடும்பங்கள் இன்றும் கவலை யுடன் உள்ளன. அவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சி தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்னைகள் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி எம்.பி. சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் சபையில் முன்வைத்த பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்த நாடு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு சொந்தமான நாடு என்பதை சிறீதரன் எம்.பி. உள்ளிட்ட அனைவரும் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து இன மக்களும் இணைந்து போராடியே இந்த நாட்டுக்கான சுதந்திரத்தை பெற்றுக்கொண்டார்கள். அதனை மறந்து வாழமுடியாது. பிற்காலத்தில் பெரும்பான்மை இன தலைவர்களின் தவறினால், நாட்டில் ஆயுத போராட்டம் ஒன்று ஏற்பட்டது. முஸ்லிம் சமூகம் ஒருபோதும் இந்த நாட்டை பிரித்து வழங்குமாறு கேட்டதில்லை. அதற்காக போராடவும் இல்லை. ஆனால், யுத்தத்தினால் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டது.

காத்தான்குடியில் பள்ளிவாசலில் அப்பாவி மக்கள் சுடப்பட்டார்கள். ஹஜ் கடமையை செய்துவிட்டு திரும்பிய மக்களின் உடல்கள் எங்கே என தெரியாமல் குடும்பங்கள் இன்றும் கவலையுடன் உள்ளன. அதேபோன்று செம்மணியில் இடம்பெற்றது பாரிய அநியாயமாகும். யார் செய்தாலும் அதற்கு தண்டனை வழங்க வேண்டும். அதனால் அனைவரும் இது எமது நாடு என சிந்தித்து செயல்பட்டால், எங்களுக்கு பின்னால் வரும் எமது பிள்ளைகள் இங்கு ஒற்றுமையாக வாழ்வார்கள்.

அத்துடன் அண்மையில் வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலின் நோக்கம், வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம், அங்கிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதாகும். இந்தக் கோரிக்கைக்கு முஸ்லிம்களும் ஆதரவு வழங்க வேண்டும் என தெரிவித்திருந்தார்கள். ஹர்த்தாலை முன்னெடுப்பதாக இருந்தால், அனை வரையும் அழைத்து கலந்துரையாடி இருக்க வேண்டும்"- என்றார். (எ)

# பிரித்தானியாவில் இலங்கை யுவதி படுகொலை

லண்டன், ஓக. 24

இங்கிலாந்தில் உள்ள கார்டிப் நகரில், வீதியொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த யுவதி ஒருவரின் கொலை தொடர்பில் 37 வயது இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை 07:37 மணியளவில் கார்டிப் நகரின் சவுத் மோர்கன் பிளேஸ் என்ற இடத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்ததாக தெற்கு வேல்ஸ் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 32 வயது டோனா நிரோதா கலப்னி என்ற பெண்ணை சடலமாக மீட்டனர்.

நிரோதா என அழைக்கப்படும் குறித்த பெண்ணை நன்கு அறிந்திருந்த திசர வெரகலகே என்ற இளைஞன், சம்பவ இடத்துக்கு அருகில் உள்ள சீவோல் பகுதியில் வைத்து பொலிஸாரால் உடனடியாகக் கைது செய்யப்பட்டார். பின்னர் குறித்த இளைஞன் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, கார்டிப் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்களை வழங்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# "ரணில் விக்கிரமசிங்க கைது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது"

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட சம்பவம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட செயலாகும். அதனாலேயே யூ - ரியூப்பர் ஒருவர், ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவார் என்று ஏற்கனவே அறிவித்திருந்தார் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இவ்வாறு கைது செய்யப் படுவார் என்று யூ - ரியூப்பர் ஒருவர் அறிந்துள்ளார். அவருக்கு இது எப்படி தெரியும். அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் அவருக்கு சில தகவல்களை கொடுத்திருக்கலாம். இதுதானா அரசாங்கத்தின் புதிய கலாசாரம் என கேட்கிறோம்.

சட்டத்துக்கு முன் அனைவரும் சமம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ இந்த நாட்டின் தலைவராக இருந்த வேறு யாராக இருந்தாலும், அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டிருந்தால் அதுதொடர்பில் அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்து, அவரை நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தால், அவரது சட்டத்தரணிகள் அதுதொடர்பில் செயல்பட்டு பிணையில் எடுக்க நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதுதான் சாதாரண நடைமுறை.

இதனைவிடுத்து, நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவரை வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அழைத்து, பின்னர் கைது செய்வது முறையான நடவடிக்கையல்ல. அவருக்கு எதிராக அறிக்கை தாக்கல் செய்திருக்கலாம். நாட்டின் முன்னாள் தலைவர் என்ற வகையில் ஓர் அடிப்படை நாகரிகம் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால், அதுதொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் நடத்தப்பட்டு, பின்னர் அவரை கைது செய்வது தொடர்பில் நீதிவான் தீர்மானித்திருப்பார்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.08.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# சமஷ்டி பற்றி வகுப்பெடுப்பதை நிறுத்துங்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஷ்டி பிரிவினை அல்ல என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார் - அத்தோடு தமிழ் அரசு கட்சி அதன் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் நிலைப்பாட்டிலிருந்து விலகிச் சென்றிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

ஒன்றில் அரசியல்வாதிகள் வரலாற்றை நன்றாக படிக்க வேண்டும் அல்லது தெரியாத விடயங்களில் பொய்கள் சொல்வதை நிறுத்த வேண்டும். முதலாவது, சமஷ்டி பிரிவினையல்ல என்பது ஜனாதிபதி அநுர குமாரவிற்கு தெரியாத ஒன்றல்ல - அதேபோன்று அனைத்து சிங்கள தலைவர்களுக்கும் தெரியும். இங்கு விடயம் சமஷ்டி பிரிவினையா அல்லது இல்லையா என்பது அல்ல - மாறாக அதிக அதிகாரங்கள் உள்ளடங்கிய தீர்வு ஒன்றை தமிழர்களுடன் பகிர்ந்து கொள்ள சிங்கள அரசியல் சமூகம் விரும்பவில்லை என்பதுதான் இங்கு பிரச்சினையாகும். இந்த அடிப்படையில்தான தமிழர்களின் 76 ஆண்டு கால சமஷ்டிக் கோரிக்கையானது, வெறும் கோரிக்கை என்பதைத் தாண்டி பயணிக்கவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்பதாக நிலைமைகளை ஆராய்வதற்காக வந்திருந்த, இந்திரா காந்தியின் விசேட தூதுவர் ஜி.பார்த்தசாரதியும் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றை மனதில் வைத்துக் கொண்டே, கொழும்பிற்கு வந்தார், ஆனால், சிங்கள அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகளுடன் கலந்துரையாடிய பின்னர்தான் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்.

ஏனெனில், சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பாத ஒன்றை இலங்கையில் திணிக்க வேண்டுமாயின், அதனை போரினால்தான் மட்டும்தான் செய்ய முடியும். இலங்கையை இராணுவ ரீதியில் அடிபடிணியச் செய்வதன் மூலமான ஒரு நிலைமையை இந்தியா செய்ய முடியாது. ஏனெனில் இலங்கை பாகிஸ்தான் அல்ல. இவ்வாறானதொரு நிலையில்தான் இந்தியா மாகாண சபை முறைமையை பரிந்துரைத்தது. ஆனால், அதனையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இலங்கைக்கான ஒரு முன்மொழிவாகவே ஏற்றுக்கொண்டார். நிலைமை இவ்வாறிருக்கின்ற போது, சமஷ்டி பற்றி சிங்கள மக்களுக்கு வகுப்பெடுக்குமாறு அரசாங்கத்திடம் கோருவதானது அர்த்தமுள்ள ஓர் அணுகுமுறையல்ல - ஏனெனில் அவர்கள் அவ்வாறு செய்யப் போவதில்லை.

அடுத்தது, தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடு தொடர்பானது. இன்றைய தமிழ் அரசு கட்சியின் செயலாளர் தெளிவாக குறிப்பிடுகின்றார் தாங்கள் செல்வாவின் வழியில்தான் பயணிக்கின்றோம். ஏனெனில் செல்வா சமஷ்டியை வலியுறுத்தினாலும் கூட, அதில் உடும்புப்பிடியாக இருக்கவில்லை. இந்த அடிப்படையில்தான் அவர் பண்டா - செல்வா உடன்பாட்டிற்குச் சென்றார்.

வரலாற்றை உற்று நோக்கினால், இந்தக் கருத்து சரியானது. பண்டாரநாயக்க சமஷ்டியை ஏற்றுக்கொள்ள முடியாது, அதற்கான மக்கள் ஆணையும் தனக்கில்லை என்று கூறிய பின்னர், செல்வநாயகம் சமஷ்டி நிலைப்பாட்டை விட்டு கீழிறங்கித்தான் சென்றார். அவ்வாறு கீழிறங்கிச் சென்ற போது அவரை யாரும் துரோகி என்றோ, கொள்கையை விட்டுக் கொடுத்தவர் என்றோ கூறவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பெயர் பலகை முக்கியமல்ல. உள்ளடகத்தில் சில விடயங்கள் இருந்தால் சரியென்பது செல்வாவிடமிருந்து வந்த ஒன்றுதான். ஒரு வேளை விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவ பலத்துடன் பேச்சுவார்த்தை மேசையில் இருந்தபோது, இவ்வாறானதொரு தீர்வை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பிருந்தது. ஆனால், விடுதலைப் புலிகளின் தலைமை அதனைச் செய்யவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தொடர்ந்தும் சமஷ்டி பற்றி பேசிக் கொண்டிருப்பது, அதே போன்று, உள்ளுக்குள் துரோகி, தியாகி என்று சண்டையிடுவது போன்றவற்றை விடுத்து, அரசியலை யதார்த்தபூர்வமாக நோக்குவதுதான் சரியானது.

# "இது எமது காலம்" நடமாடும் வரலாற்று அருங்காட்சியகம்

## பிரதமர் ஹரிணி பார்வையிட்டார்



கொழும்பு, ஓக. 24

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றை ஆராய்வதற்கான வாய்ப்பை பாடசாலை பிள்ளைகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் தற்போது கொழும்பு பொது நூலக வளாகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள "இது எமது காலம்" என்ற நடமாடும் வரலாற்று அருங்காட்சியகத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய பார்வையிட்டார்.

2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நடமாடும் அருங்காட்சியகம், இதுவரை நாட்டின் 9 மாகாணங்கள், 10 மாவட்டங்கள் மற்றும் 11 நகரங்களை உள்ளடக்கி காட்சிப்ப டுத்தப்பட்டுள்ளதுடன், இம்மாதம் 19 ஆம் திகதி முதல் கொழும்பில் அதன் முதலாவது கண்காட்சியை ஆரம்பித்தது. இது கொழும்பு பொது நூலக வளாகத்தில் ஐந்து நாட் கள் நடைபெறும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி, 1940கள் முதல் தற்போது வரையிலான காலகட்டத்தில் இந்த நாட்டின் வரலாற்றில் தேசம் மற்றும் தேசிய அடையாளத்தை கட்டியெழுப்புதல், மோதல்கள் மற்றும் பொருளாதாரம் ஆகிய கருப்பொருள்களை மையமாகக் கொண்ட தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

இதன் மூலம் வரலாறு என்றால் என்ன? அதை யார் எழுத முடியும்? வரலாற்றைக் கற்றுக்கொள்வதற்கான பல்வேறு வழிகள் என்ன? போன்ற விடயங்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மற்றும் செயல்பாடுகள் மூலம், இந்தக் கண்காட்சி பிள்ளை கள் சிந்திக்க ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நடமாடும் அருங்காட்சியகம் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் வெளிவிவகார அலுவலகத்தால் நிதியளிக்கப்பட்ட வரலாற்று உரையாடல் மற்றும் நினைவக கூட்டணி, இலங்கை சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்கான நிறுவனத்துடன் இணைந்து அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. (எ)

# வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கல்




வவுனியா, ஓக. 24

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கான கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை மட்டங்களில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் வவுனியா துடுப்பாட்டச் சங்கம் இணைந்து இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இதன்போது 130 வீர, வீராங்கனைகளுக்கு காலணிகளும், இரு பாடசாலைகளுக்கு 32 காலணிகளும் மேலும் ஐந்து பாடசாலைகளுக்கு தலா 250,000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட் டன.

வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் தே.கமலன் மற்றும் கிரிக்கெட் பயிற்சியாளர்கள், சங்க முக்கியஸ்தர்கள், அதிபர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-10)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் வெளிப்பாடு சமையல்!


பவித்ரா நந்தகுமார்

நண்பர் ஒருவர் தமது பெண்ணுக்காக மாப்பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தார். வரப்போகும் மாப்பிள்ளை சுயதொழில் செய்து கௌரவமான வருமானம் ஈட்டக்கூடிய இளைஞராக ,ருந்தாலும் பரவாயில்லை என்று நினைப்பவர் அந்த நண்பர். நண்பரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற இளைஞர் ஒருவர் அவரிடம் பெண் கேட்டு வந்தார். சுயதொழில் செய்பவராகிய அந்த இளைஞர் உணவகங்களில் பல்வேறு உணவுவகைகளை பொட்டலம் போட்டு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் 'பேக்கிங் மெட்டீரியல்" எனப்படும் கட்டுப்பொருள்களை விற்று வருமானம் ஈட்டுபவராம்.

நகரிலுள்ள பிரபல உணவகங்களுக்கு அந்தப் பொருள்களை விநியோகம் செய்வதன் மூலமே மாதம் ஒன்றுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் லாபம் ஈட்டுவதாகக் கூறினார்.

இந்தத் தொழிலில் நிலையான வருமானத்துக்கு வாய்ப்புண்டா என்று கேட்டதற்கு, உணவகங்களிலிருந்து உணவுப் பொருள்களைப் பெற்று வாடிக்கையாளர்களின் இருப்பிடத்துக்கே கொண்டு வந்து தருகிற தனியார் உணவு விநியோக சேவை நிறுவனங்கள் இருக்கும் வரை எனது வருமானம் குறித்து பயப்படவே தேவையில்லை என்று உறுதியாகச் சொன்ன அந்த இளைஞருக்கே தம்முடைய மகளைத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கியிருக்கிறார் என்னுடைய நண்பர்.நண்பரின் இல்லத்தில் விரைவில் கெட்டிமேளச் சப்தம் கேட்க வாழ்த்துகிற அதே வேளையில், தனியார் உணவு விநியோக நிறுவனங்களின் வருகை நமது அன்றாட வாழ்வில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை எனது மனம் அலசத் தொடங்கியது. பசித்தவர்களுக்கும், நடைப்பயணமாக பயணிப்பவர்களுக்கும் பயன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் நாடு முழுவதும் தருமசத்திரங்கள் எனப்படும் அன்னசத்திரங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் பல நூற்றாண்டுகளாக இயங்கி வந்த நாடு நம்முடையது. அப்பூதியடிகள் தம்முடைய மதிப்பிற்குரிய திருநாவுக்கரசரின் பெயரில் தண்ணீர்ப் பந்தலை அமைத்துதருமம் செய்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

நாகப்பட்டினத்தில் ,யங்கிய அன்னசத்திரம் ஒன்றில் ஒரிரவு தங்கிய காளமேகப்புலவர், அங்கே உணவு



கிடைக்கத்தாமதமானதை விமர்சித்துத் தமக்கே உரிய நகைச்சுவையுடன் கூடியவெண்பா பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.பசிப்பிணியைப் போக்குகின்ற உணவினைக் காசுக்கு விற்காமல், இலவசமாகவே வழங்க வேண்டும் என்ற உயர்ந்தநோக்கம் நமது முன்னோரின் வாழ்வோடு காலம்காலமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. அவரவர் இல்லத்து விழாக்களானாலும் சரி, திருக்கோயில் உற்சவங்களானாலும் சரி, அவற்றின் ஓர் அங்கமாக அன்னதானம், அன்னம் பாலித்தல், விருந்து, ததீயாராதனை, சமாராதனை என்று பல பெயர்களில் ஊரார்க்கு உணவு வழங்குதலை ஒரு கடமையாக நமது சமூகம்செய்துவந்துள்ளது.

மாறிவரும் சமூகச் சூழல் காரணமாக காசுக்கு உணவுப் பண்டங்களை விற்கும் உணவகங்கள் கபே, கிளப், பவன்,விலாஸ், ஹோட்டல் ஆகிய ஒட்டுப்பெயர்களுடன் கூடிய உணவகங்கள் கடந்த நூற்றாண்டில் ஆங்காங்கே தொடங்கப்பட்டு நாளடைவில் பல்கிப் பெருகத் தொடங்கின.தத்தமது குடும்பத்துடன் வசிக்காமல் தனியாக வசிப்பவர்கள்,

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தத்தமது இல்லங்களில் சமையல்செய்து சாப்பிட இயலாதவர்கள், வெளியூர் பயணிகள்ஆகியோரின் பயன்பாட்டுக்கென தொடங்கப்பட்ட உணவகங்கள்நாளடைவில் நமது அன்றாட வாழ்வுடன் பின்னிப்பிணையத்தொடங் கிவிட்டன.

தற்போது தனியார் உணவு விநியோக நிறுவனங்களின் வருகைக்குப் பிறகு அவரவர் இருப்பிடத்தில் இருந்த படியே அவரவருக்கு விருப்பமான உணவுப் பண்டங் களை உள்ளூர்

உணவகங்களிலிருந்து வரவழைத்து உண்பது பலருடைய வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறியிருக்கிறது. இதே நிலை மேலும் தொடர்ந்தால், அவரவர் வீடுகளில்

சமைத்து உண்ணுவது என்பதே வழக்கொழிந்து போகும் என்றால் அது மிகையாகாது. தாயொடு அறுசுவை போம்! என்ற ஔவையாரின் கூற்று மிகவும் பொருள் வாய்ந்த சொற்றொடராகும்.

குடும்பத் தலைவிகள் சமையல் செய்ய, குடும்ப உறுப்பினர்கள் உண்டு பசியாறுதல் என்பது ,வ்வுலகம் முழுவதும் காலம் காலமாகஉள்ள மரபாகும். தாயாரின் கைப்பக்குவத்தில் அமைந்த உணவின் சுவையை அனுபவித்த எவர் ஒருவரும் வேறொருவரின் சமையலை விரும்ப மாட்டார்.தாயா ருடைய கைப்பக்குவம் மட்டுமின்றி அவரது அகத்தில் பொங்கித் ததும்புகின்ற தாய்ப்பாசமும் கலந்துபரி மாறப்படுகிற காரணத்தால் அந்த உணவேஅமிர்த மாகிறது. அத்தகைய உணவு நமது உடலை மட்டும் வளர்க்காமல், உறவுகளிடையிலான பாசப்பிணைப்பை யும் சேர்த்தே வளர்த்தது. கூட்டுக் குடும்பங்கள் செழித்தன.

உணவகங்களிலிருந்து உணவுப் பண்டங்களை வாங்கி, அவற்றை நமது வீட்டின் வாசலுக்கே கொண்டுவந்து கொடுக்கும் நிறுவனங்களின் சேவை உன்னதமானதுதான். அந்த

நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுடைய வாழ்வாதாரமும் முக்கியமானதுதான். ஆனால், சமைத்து உண்பதற்கு வாய்ப்பில்லாதவர்கள் அந்தச் சேவையைப்

பயன்படுத்திக் கொள்ளட்டும். அதே சமயம், அவரவர் வீடுகளிலேயே சமைத்துச் சாப்பிட முடியும் என்ற நிலையிலிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அவ்வப்போது உணவகங்களிலிருந்து வரவழைத்து உண்பது என்பது தேவையற்ற செலவுக்கு வழிவகுப்பதுடன், காலப்போக்கில் நம்முடைய குடும்ப உறவுகளிடையிலானபாசத்துக்கும் பிணைப்புக்கும் சேதாரத்தை உண்டாக்கக்கூடியது என்பதை நாம் அனைவரும் அவசியம் உணர வேண்டும். (தினமணி)

# இந்தவார ராசிபலன் 24.08.2025 - 30.08.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 08
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். மனைவிமார்கள் தங்கள் கணவரிடம் இருந்து உண்மைக் காதலையும், உன்னத அன்பையும் பெறுவர். அரசு வகை ஆதாயமும், வங்கிகள் மூலம் கடன் உதவிகள் கிடைத்து, பயண சுகம் ஏற்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் பெற்றோர்கள் பெருமை கொள்ளலாம், உற்றார் உறவினர் பொறாமை கொள்ளும் அளவுக்கு, அளவில்லாத முன்னேற்றம் இருக்கும். நீங்கள் நினைத்தபடி, எல்லாக் காரியங்களும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். அரசு மூலம் வர வேண்டிய அனைத்து பண நிலுவைகள் அதிகாரிகள் பலத்த சிபாரிசின் மூலம் கிடைத்துவிடும்.எதிர்காலம் ஒளிமிகுந்ததாகும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மாணவர்கள் பள்ளிக் கல்வியை முடித்து கல்லூரிக் கனவுகள் மிதப்பர். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் தீர்ந்து குதூகலம் உண்டாகும். மனைவி, குழந்தைகளின் மன விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்கள் உங்களை புகழ வேண்டும் என்பதற்காக, கடினமான காரியங்களையும் இழுத்துப் போட்டுச் செய்வார்கள். தொட்டில் ஆட்டிக் கொஞ்சி மகிழ, புத்திர பாக்கியம் ஏற்படும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் குழந்தைகளின் சுட்டித் தனங்களை கண்டு மனமகிழ்ச்சி ஏற்படும். சில மாணவர்கள் பள்ளிக் கல்வி முடிந்து, புதிய கல்லூரிகளைத் தேடி அலைய நேரும். தெய்வ அருளால் வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்கள் ஏற்படும். தொழிலைப் பொறுத்தவரை எதிர்பாராத, சிறு சிறு தடைகள் ஏற்படலாம். புகழ் ஓங்கும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். சிலர் இருக்கும் போது கீழே விழுந்து காயம் பட நேரும். எனவே, எச்சரிக்கை தேவை. படிப்பைப் பொறுத்தவரை, கல்லூரியில் சேருவதற்கான உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அன்றாட வருமானத்தில் நல்ல வளர்ச்சி இருக்கும். வங்கிக் கணக்குகளில் கையிருப்பு கூடும். சிலருக்கு மனை வாங்கும் யோகம் ஏற்படும்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு இருப்பதால் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உங்களின் சிறந்த பணிக்காக கௌரவப் பட்டங்கள், புதிய பதவிகள் கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். அளவோடு உணவருந்தி அஜீரணத்தை குறையுங்கள்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்களுக்கு நல்ல செய்திகள் வரும். சுபகாரியம் செலவுகள் ஏற்படும். பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று இன்பம் பொங்கும். வீட்டுக்கு விருந் கு வரும் உறவுகளால் ஏற்படும் இன்பத்துக்கு அளவே இருக்காது. செலவு கூடும். புதிய திட்டங்களால் தொழிலில் இலாபம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்லும் போது வேகத்தை குறைத்து, எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய அரசுத் தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். சிலருக்குப் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். வியாபார சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும், அதனால் ஆதாயங்களும் ஏற்படும். பணம் வந்தால் செலவுகளும் வரும் தானே ? கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நல்ல பண்பாளர்களின் தொடர்புகள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை அடைவீர்கள். எப்போதும் மனதில் ஏற்படும் தெய்வ சிந்தனையால் மனநிம்மதி கூடும். சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக ஆக்குவார்கள். திருமண வயது வந்தும், திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்படும். தேவையற்ற நெடுந்தூரப் பயணங்கள் மேற்கொள்ள நேரும். பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி அனுபவிப்பீர்கள். செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் உங்கள் மனம் மகிழ்ச்சி அடையும் அல்லவா ? மகிழ்ச்சி பொங்கும் அளவுக்குத் தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் வியாபாரத்தில் நல்ல ஆதாயம் பெற, புதிய திட்டங்களில் உங்கள் பணத்தை முதலீடு செய்வார்கள். வீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். பக்தி மார்க்கத்தில் தீவிர ஈடுபாடு உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய்திவரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வார அனைத்து காரியங்களிலும் சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். மதிப்பும், அந்தஸ்து உயரும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆரம்பத்தில் வீட்டுக்கு செலவுகள் அதிகரிக்கும். பின்னர், திருமகளின் கருணையால் ஓரளவுக்குப் பொருளாதார முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். நவீன வசதிகளுடன் கூடிய புதிய இருசக்கர வாகனம் வாங்க முயற்சி எடுப்பீர்கள். இடைஞ்சல்கள் ஏற்படும் அல்லது திணறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு நடத்தப்படக்கூடாதோ அவ்வாறு நடத்தப்பட்ட ஓகஸ்ட் 18 ஹர்த்தால்!



**வீரகத்தி தனபாலசிங்கம்**

ஓகஸ்ட் ஹர்த்தால் என்பது இலங்கை அரசியலில் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்ட மாபெரும் போராட்டம். பிரதமர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அரிசி மானியத்தை குறைத்ததை எதிர்த்து இடதுசாரி அரசியல் கட்சிகளும் அவற்றின் தொழிற்சங்கங்களும் மக்களின் பேராதரவுடன் 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நடத்திய ஹர்த்தால் போராட்டம் முழு நாட்டையுமே செயலிழக்க வைத்தது.

அரசாங்கம் மக்களின் சீற்றத்துக்கு பயந்து அதன் அமைச்சரவைக் கூட்டத்தை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற பிரிட்டிஷ் கப்பலில் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அரசியலில் பல எதிரொலிப்புகளை ஏற்படுத்திய அந்த மகத்தான ஹர்த்தால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் அத்திபாரத்தை ஆட்டங்காண வைத்தது.

உடனடியாக இல்லாவிட்டாலும், இரு மாதங்களில் டட்லி சேனநாயக்க பிரதமர் பதவியில் இருந்து விலகியது மாத்திரமல்ல, அரசியலில் இருந்தும் தற்காலிகமாக பின்வாங்கினார். ஹர்த்தாலின் பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகளே இறுதியில் 1956 பாராளுமன்ற தேர்தலில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்படவும் வழிவகுத்தது.


வரலாறுபடைத்த அந்த ஆகஸ்ட் ஹர்த்தாலுக்கு பிறகு தென்னிலங்கையில் அத்தகைய ஒரு போராட்டம் இடம்பெறவில்லை என்ற போதிலும், 1972 முதலாவது குடியரசு அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து தேசிய இனப்பிரச்சினை தீவிரமடையத் தொடங்கிய பின்புலத்தில் எழுபதுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் அறைகூவலில் பல ஹர்த்தால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழ் மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய அந்த போராட்டங்கள் தமிழ்த் தேசியவாத உணர்வுகளை தீவிரமடையச் செய்தன. அவற்றுக்கு பின்னரான காலப் பகுதியில் ஆயுதப் போராட்டம் தொடங்கியதை தொடர்ந்து அந்த வகையான அமைதிவழி எதிர்ப்பியக்கங்களுக்கு வடக்கு, கிழக்கில் இடமிருக்கவில்லை.

உள்நாட்டுப்போர் முடிவடைந்ததற்கு பின்னரான கடந்த 16 வருடங்களில் புதிய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு உகந்த கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் வகுக்க முடியாத நிலையில் இருக்கும் தமிழ் தேசியவாத கட்சிகள் ஹர்த்தால் போன்ற போராட்ட வழிமுறைகளில் பெரிதாக நாட்டம் காட்டவில்லை.

இத்தகைய பின்புலத்தில், தமிழ் அரசியல் நிகழ்வுப் போக்குகளில் எதிர்பாராத ஒரு திருப்பமாக கடந்த வாரம் வடக்கு, கிழக்கில் ஒரு "ஆகஸ்ட் ஹர்த்தாலை" கண்டோம். 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தாலுக்கு இலங்கை அரசியலில் ஒரு நேர்மறையான குறியீடு இருக்கிறது என்றால், 2025 ஆகஸ்ட் 18 ஹர்த்தாலுக்கு ஒரு எதிர்மறையான குறியீடு இருக்கிறது எனலாம். அந்த ஹர்த்தாலுக்கு அறைகூவல் விடுக்கப்பட்டதன் நோக்கத்தை எவரும் குறைகூற முடியாது என்றாலும், ஒரு ஹர்த்தால் எவ்வாறு நடத்தப்படக்கூடாது என்பதற்கு அது உதாரணமாக அமைந்து விட்டது துரதிர்ஷ்டவசமானதே.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு பகுதியில் இராணுவத்தினருடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்ததாக கூறப்படும் எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் (வயது 32) என்பவர் படையினர் நடத்தியதாக கூறப்படும் தாக்குதலில் ஆகஸ்ட் 9 ஆம் திகதி மரணமடைந்ததை அடுத்து அவரது மரணத்துக்கு நீதி கோரியும் வடக்கு, கிழக்கில் தொடருகின்ற மட்டுமீறிய இராணுவமயத்துக்கு எதிராகவும் பிரதான தமிழ் தேசியவாதக் கட்சியான இலங்கை தமிழரசு கட்சி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது.





கபில்ராஜின் மரணம் தொடர்பாக தலையீடுகளற்ற முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து தமிழரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு ஆகஸ்ட் 10 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் வடக்கு, கிழக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட மட்டுமீறிய இராணுவப் பிரசன்னமும் படையினரின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளுமே அத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதற்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முழுமையான விசாரணை நடத்தப்படும் என்றும் அந்த மரணத்துக்கு பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அரசாங்கம் உறுதியளித்தது. பொலிசாரால் கைது செய்யப்பட்ட சில இராணுவ வீரர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

முதலில் ஆகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை முழுநாள் ஹர்த்தாலுக்கே அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், நல்லூர் திருவிழா மற்றும் மடுத் தேவாலய உற்சவம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு ஹர்த்தால் ஆகஸ்ட் 18 திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டது. முல்லைத்தீவு சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கும் நிலையில் மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கக்கூடிய ஒரு ஹர்த்தால் போராட்டம் அவசியமற்றது என்று அரசாங்கம் வெளிப்படையாக கூறியபோதிலும், தமிழரசு கட்சி அதன் அழைப்பை வாபஸ் வாங்கவில்லை. ஆனால், அரைநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று அது அறிவித்தது.

மற்றைய தமிழ்க் கட்சிகளுக்கு தமிழரசு கட்சியுடன் அடிப்படையில் பெரிதாக கொள்கை வேறுபாடு இல்லை என்ற போதிலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஹர்த்தால் அழைப்பை விடுப்பதில் முன்னரங்கத்தில் நின்று செயற்பட்ட காரணத்துக்காக அந்த கட்சிகள் ஆதரவை வழங்க முன்வரவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னதாக தமிழரசு கட்சி மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கவில்லை என்பது ஒரு முக்கிய குறைபாடு.

தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி உறுப்பினர்களும் ஹர்த்தால் வெற்றிகரமாக அமைவதற்கு முழுமையாக பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று தலைமைப்பீடம் உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியதற்கு மத்தியிலும், கட்சியின் பாராளுமன்றக்குழுவின் தலைவர் கூட ஹர்த்தாலை ஆதரிக்க வெளிப்படையாக முன்வரவில்லை.

> **தமிழ்க் கட்சிகளை ஐக்கியப்படுத்துவதில் அக்கறைகொண்டு இனிமேலும் எழுதுபவர்களுக்கும் பேசுபவர்களுக்கும் சித்தப்பிரமை என்று எவராவது சந்தேகித்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.**

ஆனால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, தொழிலாளர் தேசிய சங்கம் போன்ற மலையக கட்சிகளும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளும் ஹர்த்தாலுக்கு அவற்றின் முழுமையான ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தியிருந்தன.

இத்தகைய முரண்பாடுகள் நிறைந்த ஒரு சூழ்நிலையில் நடைபெற்ற ஹர்த்தாலின்போது இரு மாகாணங்களிலும் பல பகுதிகளில் காலையில் சில மணித்தியாலங்கள் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. அதேவேளை, இராணுவமயத்துக்கு எதிரான போராட்டம் என்பதையும் பொருட்படுத்தாமல் வேறு பல பகுதிகளில் வர்த்தக நிறுவனங்கள் ஒத்துழைப்பை வழங்கவில்லை. மற்றைய தமிழ்க் கட்சிகள் வெளிப்படையாக ஹர்த்தாலை எதிர்த்து அறிக்கை எதையும் வெளியிட்டிருக்க முடியாது என்கிற அதேவேளை, போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் மீதான அரசியல் பகைமை காரணமாக அது தோல்வியில் முடிவடைய வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தன என்பதில் மறைத்துப் பேசுவதற்கு எதுவுமில்லை.

வடக்கு, கிழக்கில் எதிர்பார்த்த அளவுக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்ற போதிலும், தமிழரசு கட்சியின் தலைவரும் பொதுச்செயலாளரும் ஹர்த்தால் முடிவடைந்த பிறகு நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் தமிழ் மக்களின் கலாசாரத் தலைநகரம் என்று கருதப்படும் யாழ்நகரில் ஹர்த்தாலுக்கு கிடைக்காத ஆதரவு குறித்து தங்களது விசனத்தை பிரத்தியேகமாக வெளிப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தவர்களுக்கு தமிழ் மக்கள் உகந்த பாடத்தை புகட்டியிருக்கிறார்கள் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். போரின் முடிவுக்கு பின்னரான இன்றைய காலப்பகுதியில் ஹர்த்தால் போன்ற போராட்ட வழிமுறைகளில் தமிழ் மக்களுக்கு அக்கறை இல்லை என்பது கடந்த வாரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தை முன்வைக்கும் இன்னொரு தரப்பினரும் இருக்கிறார்கள். அவ்வாறானால், இனிமேல் ஒருபோதுமே வடக்கு, கிழக்கில் ஹர்த்தாலையோ அல்லது வேறு வடிவிலான அமைதிவழிப் போராட்டங்களையோ பயனுறுதியுடைய முறையில் நடத்த முடியாமல் போகலாம் என்றே தோன்றுகிறது.

ஆகஸ்ட் 18 வடக்கு, கிழக்கில் காணக்கூடியதாக இருந்த கோலங்கள் முன்னாள் போர் வலயங்களில் தொடருகின்ற அநாவசியமான இராணுவமயமாக்கல் குறித்த மக்களின் விசனத்தை பிரதிபலித்ததா அல்லது இலங்கை தமிழ் அரசியல் சமுதாயத்திற்குள் இருக்கின்ற ஆரோக்கியமற்ற பிளவுகளை பிரதிபலித்ததா என்ற கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

தேசிய இனப்பிரச்சினையாக இருந்தாலென்ன, வடக்கு, கிழக்கில் மக்கள் எதிர்நோக்குகின்ற மனிதாபிமானப் பிரச்சினைகளாக இருந்தாலென்ன அவற்றுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு தமிழ்க் கட்சிகளிடம் ஒன்றிணைந்த அணுகுமுறைகளை எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாகவே தோன்றுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கும் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையும் சில சிவில்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளுக்கு நடைமுறைச் சாத்தியமான ஓர் அரசியல் தந்திரோபாயம்



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசியல் தந்திரோபாயங்களை ஆராய்வதற்கு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த முக்கியமான அரசியல்வாதிகள் நடத்திய கூட்டம் பெரும் பரந்தளவில் கவனத்தை ஈர்த்தது. அரசாங்கத்தை எதிர்ப்பதற்காக கூட்டம் கூட்டப்படவில்லை என்று அதில் கலந்துகொண்டவர்கள் கூறினார்கள். அண்மைய அரசியல் நிகழ்வுப்போக்குகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காகவும் பொதுவான அக்கறைக்குரிய விடயங்களை அடையாளம் காண்பதற்காகவுமே அது கூட்டப்பட்டது என்று அவர்கள் கூறினார்கள்.

ஜனநாயக சக்திகள் மத்தியில் பேச்சுவார்த்தைகளை மேம்படுத்துவதும் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதுமே கட்டத்தின் நோக்கம் என்று முன்னாள் அமைச்சர்கள் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் மனோ கணேசன் உட்பட பல பங்கேற்பாளர்கள் கூறினர். பொருளாதார மீட்சி, கடந்தகால வன்முறைச் சம்பவங்களுக்கான நீதி மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளுக்கு மதிப்பு தொடர்பில் பெருமளவு எதிர்பார்ப்புக்களுடனேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. எதிர்க்கட்சிகள் வாக்காளர்களுடன் மீண்டும் தொடர்பாடலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால், அவை அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஒன்றுகூடிய எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தங்களின் இந்த முயற்சி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கானதல்ல, மாறாக ஜனநாயக விழுமியங்களை எவ்வாறு உறுதிசெய்வது என்பது குறித்தும் தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கத்தைக் கொண்டு நிறைவேற்றச் செய்வது குறித்தும் பொதுவான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வதற்கானதே என்று கூறினார்கள். ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் வாக்காளர்களினால் பெரும்பாலும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டது எதிய்க்கட்சிகள் முகங்கொடுக்கும் பாரதூரமான ஒரு பிரச்சினையாகும்.

ஊழல் மற்றும் தண்டனையின்மை அரசியல் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதே தேர்தல்களுக்கு முன்னர் இடம்பெற்ற அறகலய போராட்டத்தில் மக்களின் குரலாக இருந்தது. ஊழலில் இருந்தும் குடும்ப ஆட்சியில் இருந்தும் விடுபட்ட புதிய அரசியல் தலைமைத்துவம் ஒன்று தேவை என்பதே காலிமுகத்திடலின் மையக் கோரிக்கையாக இருந்தது. தேர்தல்களுக்கு பிறகு ஒரு வருடம் கடக்கின்ற நிலையிலும் எதிர்க்கட்சிகள் மக்களினால் தொடர்ந்தும் எதிர்மறையான வெளிச்சத்திலேயே நோக்கப்படுகின்றன.

அரசியல் கட்சிகள் மீதான மக்களின் நம்பிக்கை மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதை இவ்வருட முற்பகுதியில் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய ரீதியிலான ஆய்வொன்று காண்பித்தது. தூய்மையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஆற்றல் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு இருக்கிறது என்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 12 சதவீதமானவர்கள் மாத்திரமே நம்பிக்கை தெரிவித்தார்கள். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் முன்னதாக தேசிய சமாதானப் பேரவை நடத்திய ஆய்வொன்று பாரம்பரிய அரசியல் கட்சிகள் குறித்து மக்கள் மத்தியில் பரந்தளவில் அதிருப்தி நிலவுவதை காண்பித்தது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சுமார் 50 சதவீதத்தினர் இலங்கையின் நெருக்கடிகளை தீர்த்து வைப்பதற்கு புதியதொரு அரசியல் சக்தி அவசியம் என்ற கருத்தைக் கொண்டிருந்த அதே வேளை, 90 சதவீதமானவர்கள் முற்று முழுதான அரசியல் மாற்றம் ஒன்று தேவை என்று கூறினார்கள். இப்போது கூட, அரசாங்கத்தின் குறிப்பிட்ட சில




கொள்கைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் முயற்சிக்கும்போது கடந்த காலத்தில் செய்திருக்கக்கூடியதைப் போன்று மக்கள் அதற்கு பிரதிபலிப்பை வெளிக்காட்டுவதில்லை.

கடந்த வருடத்தைய ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் அதிகாரத்தில் பாரிய நகர்வையும் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு நியாயப்பாட்டையும் கண்டன. பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்கள் கிடைத்தன. சுயகட்டுப்பாட்டுடன் தனித்துவமான பாணியில் தீர்மானங்களை எடுப்பது புதிய அரசாங்கத்தின் மிகவும் சிறப்பான அம்சமாகும். உள்ளக கலந்தாலோசனைக்கும் விவாதத்துக்கும் பின்னரே அரசாங்கத்தின் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால், எதிரணி அரசியல் கட்சிகளுடனும் பரந்தளவில் சிவில் சமூகத்துடனும் அரசாங்கம் அதேபோன்ற கலந்தாலோசனையையும் விவாதத்தையும் நடத்துவதாக இல்லை.

தங்களது கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாட்டு மக்களின் தெளிவான ஆணை இருக்கிறது என்பதும் அதனால் அந்த ஆணையைத் தளர்வுக்கு உள்ளாக்க வேண்டிய தேவை எதுவும் இருப்பதாக தாங்கள் காணவில்லை என்பதுமே அரசாங்கத் தலைவர்களின் நிலைப்பாடாகும். தீர்மானத்தை மேற்கொள்வதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் வழிமுறை எதிரணி அரசியல் கட்சிகளின் முற்றுமுழுதாக ஓரங்கட்டுவதாக அமைந்திருக்கிறது. அவர்கள் வகிப்பதற்கு எந்த பாத்திரமும் இல்லை.

உண்மையில், அரசாங்கத்துக்கு அதன் சொந்தத்தில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் இருப்பதால், தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைகளில் எதிர்க்கட்சிகளை உள்ளடக்க வேண்டிய தேவை அதற்கு இல்லை. மக்களினால் நிராகரிக்கப்பட்ட தோல்விகண்ட அரசியல்வாதிகளாக எதிரணி தலைவர்களை அரசாங்கம் நோக்குவதால், அவர்களை அந்த செயன்முறைகளில் உள்ளடக்க வேண்டிய தேவை இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. மக்கள் மத்தியில் எதிர்க்கட்சிகள் மீதான நம்பிக்கை மட்டம் மிகவும் தாழ்வாக இருப்பதாக சுயாதீனமான கருத்துக் கணிப்புகள் தொடர்ச்சியாக காண்பித்துக் கொண்டிருப்பது அரசாங்கத்தின் இந்த எண்ணத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

கடந்த காலத்தில் அதிகாரப் பதவிகளில் இருந்துகொண்டு பணத்தைக் குவிப்பதற்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம்



செய்தவர்கள் அல்லது சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அனேகமாக, ஒவ்வொரு நாளும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முன்னணி அரசியல்வாதிகள் அல்லது அரசாங்க நிருவாகிகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்

> **மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாமல், ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்து மாகாண சபைகளை பயனுறுதியுடைய முறையில் இயங்க வைப்பதற்கு சீர்திருத்தங்களுக்காகவும் எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்கவேண்டும்.**

தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை அல்லது நீதிமன்றத்தின் பிடியாணை மீது பொலிசாரால் கைது செய்யப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

மேற்கூறப்பட்ட இரு காரணிகளின் பொருட்டே ஒன்றுபட வேண்டும் என்ற உத்வேகம் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஊழலுக்கும் தண்டனையின்மைக்கும் எதிரான அதன் நிகழ்ச்சித் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுப்பதை தடுத்து நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் எதையும் செய்யக்கூடியது சாத்தியம். கடந்த காலத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய குற்றங்களுக்காக அரசாங்க அமைச்சர் ஒருவர் கூட விசாரணைக்கு உள்ளாகின்ற அளவுக்கு அரசாங்கம் மிகவும் கண்டிப்பாக அதன் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறது.

அதேவேளை, மக்கள் மத்தியில் ஆதரவையும் நியாயப்பாட்டையும் மீளப் பெறுவதற்கு திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைவான வழியைக் கண்டுபிடிக்கவில்லை என்றால், தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டு பொருத்தமற்றவையாக போகக்கூடிய ஆபத்து இருப்பதாக எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன. இத்தகைய பின்புலத்திலேயே, அரசியலில் மீண்டும் பிரவேசிப்பதற்கு ஒரு வழிவகையாக தேசிய மட்டத்துக்கு கீழ் அதிகாரத்தைப் பகிர்வதற்கான யோசனை கவனத்தைப் பெறத் தொடங்கியிருப்பதுடன் பரிசீலிக்க வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

மத்தியில் அதிகாரத்தில் இருந்து ஓரங்கட்டப்படுவதனால் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற விரக்தியை தேசிய மட்டத்திற்கு கீழ் அதிகாரத்தைப் பெறுவதன் மூலமாக தணிக்கமுடியும். நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் கோரமுடியும். மாகாணசபைகள் முறை இன, மத சிறுபான்மைச் சமூகங்களுடன் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகாரங்களை பகிர்வதற்கான பொறிமுறையாகவே நிறுவப்பட்டது. ஆனால், அது சகல ஒன்பது மாகாணங்களிலும் எதிர்க்கட்சிகளுடன் அதிகாரங்களைப் பகிர்வதற்கான பொறிமுறையாகவும் விளங்குகிறது.

மத்திய சட்டவாக்க சபையில் (பாராளுமன்றம்) தேசிய மக்கள் சக்தி தற்போது பலம்பொருந்திய பெரும்பான்மையுடன் இருப்பதால், அதை எதிர்க்கட்சிகள், குறைந்தபட்சம் அடுத்த பொதுத்தேர்தல் வரையாவது அகற்றுவது சாத்தியமேயில்லை. ஆனால், மாகாண மட்டத்தில் அவற்றுக்கு இன்னமும் உறுதியான அமைப்புரீதியான தளங்கள் இருப்பதுடன் வாக்குகளைத் திரட்டக்கூடிய பிரபலமான ஆளுமைகளும் உள்ளனர்.

2026 முதல் அரைப்பகுதியில் மாகாணசபை தேர்தல்களை நடத்தப்போவதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது. பிரதான அரசியல் நீரோட்ட கட்சிகள் மாகாணசபைகள் முறையை சிறுபான்மைச் சமூகங்களின் ஒரு கோரிக்கையாக நோக்கியதால், அந்த முறைக்காக துடிப்பாக குரல் கொடுக்கவில்லை. ஆனால், தற்போதைய சூழ்நிலைகளின் கீழ், தேர்தலை நடத்துமாறு கோரிக்கையை முன்வைப்பதும் மாகாணசபைகள் முறையில் சீர்திருத்தங்களுக்காக ஆதரவைத் திரட்டுவதும் எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, அர்த்தமுடையதாக அமையும்.

மக்களினால் தெரிவு செய்யப்படும் மாகாணசபைகளினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை, மத்திய அரசினால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் புறக்கணிக்கக் கூடியதாக அமைந்திருக்கும் அதிகாரங்களை அகற்றுவது இந்த சீர்திருத்தங்களின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். முக்கியமான தீர்மானங்களை தடுத்து நிறுத்துவதற்கு அல்லது காலவரையறையின்றி தாமதிப்பதற்கு ஆளுநருக்கு இருக்கும் ஆற்றல் காரணமாக மாகாணசபைகள் கணிசமான நெருக்குவாரங்களின் கீழேயே செயற்பட்டு வந்திருக்கின்றன. ஆளுநரின் இந்த அதிகாரத்தை நீதித் துறையின் மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம் என்பதுடன் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு போன்ற


(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விரும்பி எதிர்பார்த்தது இதுவாகக்கூட இருக்கலாம்!

பனங்காட்டான்

இலங்கை அரசியலில் இனிமேல் திடீர் நிகழ்வுகள் இடம்பெறலாம் என்பதற்கு கட்டியம் கூறியுள்ளது ரணில் விக்கிரமசிங்கவின் கைதும் விளக்கமறியலும்.



தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ஹர்த்தால் எனப்படும் கடையடைப்பு பிசுபிசுத்துப்போன செய்திகள் முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் ரணிலின் செய்தி அதிரடியாக முன்னுரிமை பெற்றுள்ளது.

இதிலும்கூட ஒருவகையான அரசியல் ஒற்றுமை இருப்பது போலவே தெரிகிறது. இவரின் நல்லாட்சிக் காலத்தில் இவரோடு இணைந்து இவருக்கு இயைவாக புதிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கும் தகவலை நம்பிக்கையோடு அறிவித்துக் கொண்டிருந்தவர் சுமந்திரன். இதனால் சுமந்திரனை தங்களின் சட்ட மாஅதிபர் (அட்டர்னி ஜெனரல்) என்று பல தடவை ரணில் அழைத்து வந்தார். இதே சுமந்திரனை இணைத்து புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடரும் என்று அநுர குமர திஸ்ஸநாயக்கவும் தேர்தலின்போது கூறி வந்தார்.

இவர்கள் இருவரதும் புகழ்மாலைதான் சுமந்திரனை நாடாளுமன்றத் தேர்தலிலும், தமிழரசுக் கட்சி தலைவர் போட்டியிலும் படுதோல்வி அடையச் செய்ததாக உள்வீட்டுக்காரர்கள் சொல்வார்கள். இப்போது மூன்றாவது தோல்வியையும் இவர் கண்டுள்ளார் - அது கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற விநோதமான ஹர்த்தால்.

தமிழரசு கட்சிக்கு எட்டு எம்.பிக்கள் உள்ளனர். இவர்களுள் சுமந்திரனின் குரலாக வர்ணிக்கப்படும் சாணக்கியனே ஹர்த்தலை ஆதரித்து முதலில் அறிக்கை வெளியிட்டவர். 18ஆம் திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வன்னி மாவட்ட எம்.பி. ரவிகரனும் அழைப்பு விடுத்திருந்தார். மற்றைய எம்.பிக்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. அல்லது கட்சியின் தலைமைப் பீடம் அவர்களை மறந்திருக்கலாமோ!

வடக்கு கிழக்கிலுள்ள 58 உள்ளூராட்சிச் சபைகளில் 34ல் தாங்களே ஆட்சி அமைத்துள்ளதாக சுமந்திரன் கூறி வந்தார். இதன் தவிசாளர்களை ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யுமாறு அதற்கு இரண்டு நாட்கள் முன்னரே பகிரங்கமாக கட்சி அழைப்பு விடுத்தது. பல தவிசாளர்கள் அதில் அக்கறை காட்டியதாக தெரியவில்லை. 300க்கும் அதிகமான உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களும் இதுபற்றி கரிசனை காட்டவில்லை.

தேசியப் பட்டியலூடாக எம்.பி. ஆகிய வவனியா பிரமுகர் சத்தியலிங்கத்தால் அந்தப் பிரதேசத்தில் ஹர்த்தாலை நடத்த முடியாமல் போனதென்றால் அவருடைய அரசியல் செல்வாக்கை இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

15ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்ட ஹர்த்தால் மடுமாதா திருவிழாவை முன்னிட்டு 18ம் திகதிக்கு மாற்றப்பட்டது. அடுத்து பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஓர் அறிவிப்பை விடுத்தார். நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஹர்த்தால் நான்கு மணிக்கு நிறைவுபெறும் என்பது இவரது அறிவிப்பு. சுமந்திரன் சும்மா இருப்பாரா? அடுத்து அவர் ஒரு அறிவித்தலை விட்டார் - ஹர்த்தால் முற்பகலுடன் நிறைவு பெறும் என்பது அது. வழக்கமாக காலை பதினொரு மணியளவில் திறக்கப்படும் வணிக நிலையங்கள் அன்றும் அவ்வாறே திறக்கப்பட்டன. அவை மூடப்பட்டிருந்த காலை நேரத்தை ஹர்த்தாலுக்கான வெற்றி என விந்தையான அறிவிப்பு வந்தது.

ஹர்த்தால் ஆரம்பமாகாமலே வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது ஈழத் தமிழர் வரலாற்றில் இதுதான் முதற் தடவை. இதற்காக சுமந்திரனும் சீ.வீ.கே.யும் ஒன்றாக அமர்ந்திருந்து அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர். எந்த ஊடகமும் சுயாதீனமாக ஹர்த்தால் வெற்றிகரமாக நிறைவேறியது என்று செய்தி இடாததை இங்கு கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

இப்படியாக முசுப்பாத்தி முடிந்த நிலையில், மட்டக்களப்பிலிருந்து சாணக்கியன் முக்கியமான கருத்தொன்றை வெளியிட்டார். அதாவது, ஹர்த்தால் அறிவிப்பை தாங்கள் வெளியிட்டவுடன் சுமந்திரனுடன் ஜனாதிபதி அநுர குமர தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறியதையடுத்து, ஜனாதிபதியின் கூற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் ஹர்த்தாலை அரைநாளாக்கியதாக சாணக்கியன் தெரிவித்திருந்தார்.

இதனூடாக தெரிய வருவதானது, முதலில் மடுவுக்காகவும் பின்னர் நல்லூருக்காகவும் 18ஐ 15 ஆக்கி, முழுநாளை அரைநாளுக்கும் குறைவாக்கிய ஹர்த்தால், அனைவரையும் முட்டாள்களாக்கி தமிழரசு கட்சியையும் அவமானத்துக்குள்ளாக்கியது என்பதுவே. இந்தப் பாணியில் இனிமேல் உண்ணாவிரதப் போராட்டங்களையும் பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் ஆரம்பித்து நான்கு மணிக்கு முடித்தால் அதுவும் பெரு வெற்றியாகும்.

1961இல் சத்தியாக்கிரகப் போராட்டத் தால் மேலெழுந்து தமிழரின் தலைமையாக உருவான தமிழரசு கட்சியை உருக்குலைத்து அழித்துவிட்டே போவதென 'இறக்குமதி' முடிவெடுத்தால், தந்தை செல்வா வேண்டிய கடவுளாலும் இதனைக் காப்பாற்ற முடியாது போகலாம்.

இனி, தெற்கைத் திரும்பிப் பார்க்கலாம். இப்போது ரணிலின் இன்னொரு காலம் ஆரம்பமாகியுள்ளது. இவர் சிங்கள தேசிய அரசியலில் 26 வயதில் கால் பதித்தவர். பெரிய தந்தையார் முறையான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் 1977 பொதுத்தேர்தலில் எம்.பி.யாக்கப்பட்டவர். இளவயதிலிருந்தே பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்தவர். 1993 முதல் - 2022வரை ஐந்து தடவைகள் பிரதமர் பதவியை வகித்தவர். சட்டவாளர், 43 ஆண்டுகள் எம்.பியாக இருந்தவர், இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டவர் என்ற பல சாதனைகளின் சின்னம் ரணில்.

இவரது பேரனார் டி.ஆர்.விஜேவர்த்தன லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகர். ஜே.ஆர். ஜெயவர்த்தன இவரின் பெரிய தந்தை. இலங்கையில் ஊடகங்களையும் அரசியலையும் ஆட்டிப்படைத்த எஸ்மன்ட் விக்கிரமசிங்க இவரது தந்தை. தற்போதைய டெய்லி மிரர் - சன்டே ரைம்ஸ் பத்திரிகைகளின் உரிமையாளர் ரஞ்சித் விஜேவர்த்தன இவரது தாய்மாமன். பிரபல வணிகரும் ஐலன்ட் பத்திரிகை நிறுவனருமான உபாலி விஜேவர்த்தன இவரது ஒன்றுவிட்ட சகோதரர். இவ்வாறு பலமான குடும்பப் பின்னணியைக் கொண்ட ரணில் இப்பொழுது அநுர அரசின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ளார்.

> மக்கள் நினைப்பதுவோ அரசியல்வாதிகள் எண்ணுவதோ எப்போதும் ஒன்றாக இருப்பதில்லை. அதலபாதாளத்திலுள்ள தமது கட்சியை மீளநிமிர்த்தவும், தமது தலைமையை கட்டியெழுப்பவும் அநுதாப அலை சிலவேளை கைகொடுக்கலாமென ரணில் நினைத்திருக்கலாம். சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசியல் பிரவேசம் இதற்கு நல்ல உதாரணமென அவர் எண்ணினாரோ தெரியவில்லை.

2022 அறகலய போராட்டத்துக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் நாட்டை விட்டு ஓடிய கோட்டாபய ஜனாதிபதி பதவியை துறந்ததையடுத்து அதிர்ஷ்டத்தால் அப்பதவியை பெற்றவர் ரணில். 2020 நாடாளுமன்றத் தேர்தலில் இவரது ஐக்கிய தேசிய கட்சி ஓர் ஆசனத்தையும் பெறவில்லை. தேசியப் பட்டியலூடாக கிடைத்த ஓர் ஆசனத்தால் எம்.பி.யானவர் இவர். இதன் வழியாக கோட்டாபயவின் இடத்துக்கு ஜனாதிபதியாகி அந்தக் கதிரையில் ஏறியவர் என்கின்ற பின்னணி இவரது அரசியல் வாழ்வில் முக்கியமான ஒன்று.

ரணிலின் மனைவி மைத்ரீ பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர். இத்தம்பதியருக்கு பிள்ளைகள் இல்லை. தனது மனைவியின் பட்டமளிப்பு நிகழ்வொன்றுக்கு இங்கிலாந்துக்கு சென்ற பயணமே ரணிலை கைது செய்வதற்கு காரணமாயிற்று. இந்நிகழ்வுக்காக கிடைத்த அழைப்பு உத்தியோகபூர்வமானதல்ல. மனைவி மைத்ரீ பட்டம் பெறுவதில் பங்குபற்றுவதற்கான தனிப்பட்ட அழைப்பு. இதில் பங்குபற்றுவதற்கு தமது அலுவலக பரிவாரங்களையும் அழைத்துச் சென்றதால் 16.9 மில்லியன் ரூபா அரச பணத்தை முறைகேடாக பயன்படுத்தினார் என்பதே ரணில் மீதான குற்றம். இவ்விவகாரம் தேர்தல் காலத்தின்போதே பகிரங்கமாக விவாதிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைக்கு கடந்த மாதம் 22ஆம் திகதி அழைக்கப்பட்ட ரணில், நீதிமன்றில் நிறுத்தப்பட்டு 26ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அநுர குமரவின் ஆட்சியில் ஏற்கனவே பல முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் விசாரணைக்கென அழைக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதும், சிலர் பிணையில் விடுதலையானதும் புதிய விடயமன்று. விசாரணைக்குச் செல்லும்போதே ரணில் கைதுசெய்யப்படலாமென்பது யூரியூப் ஊடகமொன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தெரிந்து கொண்டும் அவர் விசாரணைக்குச் சென்றிருந்தாரென்றால் இதனை அவர் எதிர்பார்த்திருக்கலாம்.

இவர் மீதான நடவடிக்கைகளுக்கு பல ஊடகங்களும் பெருமளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இவ்வாறு கைதானதும் விளக்கமறியலில் வைக்கப்பட்டதும் இதற்கான காரணமாக இருக்கலாம். அதேசமயம் ரணிலை மீண்டும் அரசியலில் முன்னெழுப்புவதற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

இதற்கு வாய்ப்பாக வெளியான சில ஊடகத் தலைப்புகளை உதாரணமாக இங்கு பார்க்கலாம் - பலத்த பாதுகாப்புடன் பொலிஸ் வண்டியில் கொண்டு செல்லப்பட்டார், சிறைக்கு அனுப்பப்பட்டார் ரணில், கைவிலங்குகளுடன் ரணில், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் ரணிலுக்கு,. அவரது மனைவிக்கு புற்றுநோய், நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டவர் ரணில் என்றவாறான அரசியல் சித்தரிப்புகள் பெருமளவுக்கு வந்துள்ளன. இப்படிச் சுட்டுவதால் ரணில் குற்றம் புரிந்தவர் என்றோ இல்லை என்றோ இப்போது கூற முடியாது. அதை நீதி விசாரணை முடிவில் தெரிந்து கொள்ள முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்காலத்தில் ஜே.வி.பி.யினருக்கு இழைக்கப்பட்ட சித்திரவதை, படுகொலைகள் பட்டலந்த முகாமில் ரணிலின் மேற்பார்வையில் இடம்பெற்றதாக முன்னர் விசாரணை இடம்பெற்றது. அறகலய போராட்டத்தைப் பயன்படுத்தி ரணில் ஜனாதிபதியாகி ராஜபக்ஷக்களை காப்பாற்றியதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தப் பின்னணியுடன் பார்க்கையில் ரணில் மீதான நடவடிக்கை ஒரு கலவையாகக்கூட இருக்கலாம். அதேசமயம் எதிர்காலத்தில் ராஜபக்சக்களையும் வேறு சில தலைகளையும் கைது செய்வதற்கான ஒத்திகையாகவும் இது இருக்கக்கூடும்.

இதற்கும் அப்பால், இவ்வாறான கைதையும் விளக்கமறியலையும் தமது எதிர்கால அரசியல் வளர்ச்சிக்கும் தமது கட்சியை மீளவும் கட்டியெழுப்புவதற்கும் ரணில் விருப்போடு எதிர்பார்த்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

காய் பழம் ஆகுமா அல்லது அழுகி நொழுகி வீழ்ந்து விடுமா என்பதற்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டி வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு பொறிகள்!

நிலாந்தன்

லட்சக்கணக்கானவர்கள் திரளும் நல்லூர்த் திருவிழாவின் ஒரு பகுதியாக "ஊருணி பாரம்பரிய ஆற்றுகைக் களம்" என்ற தலைப்பின் கீழ் ஒரு சிறு கலந்துரையாடல் களம் திறக்கப்பட்டது. ஊருணி என்பது திருக்குறளில் உள்ள ஒரு வார்த்தை. ஊரில் நீரை நுகரும் இடம் அவ்வாறு என்றழைக்கப்பட்டது. பத்தாம் திருவிழாவில் இருந்து தொடங்கி நல்லூர் வளாகத்துக்குள் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள புடவைக் கைத்தொழில் திணைக்கள வளாகத்தில் இக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன. அங்கு நிலத்தடி நீரைப் பாதுகாப்பது தொடர்பான கண்காட்சியும் இடம்பெற்றது. பங்களிப்புடன் கூடிய ஆராய்ச்சிக்கூடாக வடக்கின் நீரைப் பாதுகாப்புக்கான அமைப்பும், வடக்கின் இளம் நீர் வாண்மையாளர்களும் இணைந்து முன்னெடுத்த மேற்படி கலந்துரையாடல்களில் வடக்கின் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்பை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் அமைப்பு என்பது கடந்த ஐந்து வருடங்களாக இயங்கி வருகின்றது. பேராசிரியர் சிறீஸ்கந்த ராஜாவின் தலைமையின் கீழ் இந்த அமைப்பு செயற்படுகின்றது.

நல்லூர்த் திருவிழா வளாகத்தில் இடம்பெறும் இச்சந்திப்புகள் மிகச் சிறியவை. திருவிழாவுக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களோடு ஒப்பிடுகையில் இந்த சந்திப்புகளில் கலந்துகொள்பவர்கள் மிகச்சிறிய எண்ணிக்கைதான். ஆனால் அவர்கள் விவாதிக்கும் விடயங்கள் யாழ்ப்பாணத்தின் உயிர் நிலைகளோடு சம்பந்தப்பட்டவை. அவை ஜனரஞ்சகமானவையோ அல்லது பெருந்திரளைக் கவர்பவையோ அல்ல. ஆனால் முழுச்சமூகத்தினதும் உயர்நிலையான அம்சங்கள் தொடர்பான உரையாடல்கள். அவை சிறியவை. ஆனால் தொடர்ச்சியானவை. தொடர்ச்சியாக இருப்பதுதான் அவற்றின் பலம்.

மென்மையான நீர் ஒரு பாறையின் மீது தொடர்ச்சியாக ஓடும்போது அந்தப் பாறையில் ஒரு தடத்தை உருவாக்குகின்றது. பாறையோடு ஒப்பிடுகையில் நீர்த் தாரை மென்மையானது. ஆனால் அதன் பலம் தொடர்ச்சியாக ஓடுவதுதான். தொடர்ச்சிதான் அது மிக வலிமையான பாறையில் ஒரு தடத்தை உருவாக்க காரணம். அப்படித்தான் சிறிய, ஜனரஞ்சகமற்ற, பரபரப்பை, பிரபல்யத்தைத் தேடாத சிறிய முயற்சிகள் ஒரு சமூகத்தின் உயர் நிலையான அம்சங்களில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

இதுபோன்று சிறுசிறு சந்திப்புகள், ஆனால் தொடர்ச்சியானவை எல்லாச் சமூகங்களிலும் இடம்பெறுகின்றன. பண்பாட்டுச் செழிப்புமிக்க எல்லாச் சமுகங்களிலும் இதுபோன்ற சிறிய ஆனால் சீரியஸான உரையாடல் களங்கள் இருக்கும். இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்து அனுபவத்தைத்தான் இங்கு பகிர்கிறது.

யாழ்ப்பாணத்தில் மேற்கண்ட இளம் நீர் வாண்மையாளர்களைப் போல இலக்கியவாதிகள், துறைசார் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆங்காங்கே சிறிய அளவில் கூடி தமது துறைசார் விடயங்களை உரையாடும் பல்வேறு சந்திப்பிடங்கள் உண்டு.

உதாரணமாக, அண்மையில் நடந்த யாழ்ப்பாணத்தின் இரண்டாவது சர்வதேச புத்தகச் சந்தையின் பின்ணியைக் குறிப்பிடலாம். யாழ் வர்த்தக தொழிற்துறை மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இப்புத்தகத் திருவிழாவை முன்னின்று ஒழுங்கமைத்தவர் வசீகரன். "எங்கட புத்தகங்கள்" என்ற பெயரில் ஒரு இடையூடாட்டக் களத்தை அவர் வைத்திருக்கிறார். யாழ்ப்பாணம் கந்தர்மடம், அம்மன் வீதியில் ஒரு சிறிய வீட்டில் எங்கட புத்தகம் இயங்குகிறது. உள்ளூர் வெளியீட்டாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த அமைப்பானது புத்தக வெளியீடுகளையும் சிறிய சிறிய இலக்கிய கலந்துரையாடல்களையும் ஒழுங்கமைத்து வருகிறது. யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் இப்பொழுது அதன் திரைப்படங்களை இங்கேதான் திரையிட்டு வருகின்றது. எங்கட புத்தகங்கள் அமைப்பின் சந் திப்புகள் அநேகமாக சிறியவை. ஆனால் தொடர்ச்சியானவை பெரும்பாலும் ஒரே முகங்கள்தான் அங்கே காணப்படுவ துண்டு.


துறைசார்ந்த விடயங்களில் சீரியசாக சிந்திப்பவர்கள் ஆழமாக உரையாடுபவர்கள் எப்பொழுதும் சிறிய அளவினராகத்தான் இருப்பார்கள். சீரியஸானதற்கும் ஜனரஞ்சகமானதுக்கும் இடையிலான இடைவெளி தமிழில் மட்டுமல்ல உலகின் பல சமூகங்களிலும் ஆழமானது. குறிப்பாக காணொளிகளின் காலத்தில் சீரியஸுக்கும் ஜனரஞ்சகத்துக்கும் இடையிலான இடைவெளி என்பது பாரதூரமான விதங்களில் அகன்றுவிட்டது, ஆழமாகிவிட்டது.

ஆனாலும் சீரியஸான விடயங்களை உரையாடுபவர்கள் சிறிய தொகையினர் எல்லா சமூகங்களிலும் எப்பொழுதும் கூடிக் கதைத்துக் கொண்டே இருப்பார்கள். எங்கட புத்தகங்களைப் போலவே மற்றொரு அமைப்பு யாழ்ப்பாண திரைப்படக் கழகம் ஆகும். இது தொடர்ச்சியாக இயங்கி வரும் ஒரமைப்பு. மூத்த இலக்கியச் செயற்பாட்டாளராகிய யேசுராசா இந்த அமைப்பை இயக்கி வருகிறார். அண்மையில் சிறிய அளவில் சர்வதேச திரைப்பட விழா ஒன்றையும் அவர் ஒழுங்குபடுத்தியிருந்தார். வணிக நோக்கிலான திரைப்படங்களுக்கும் அப்பால் சீரியஸான கலைப் பெறுமதி கூடிய திரைப்படங்களை யாழ் திரைப்படக் கழகம் தொடர்ச்சியாக திரையிட்டு வருகிறது. படத்துக்குப் பின் அங்கே கலந்துரையாடல்களும் நடக்கும்.

அதுபோல மற்றொரு அமைப்பு அது யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து சற்று விலகி அமைந்திருப்பது. "தேசிய கலை இலக்கியப் பேரவை". இதற்கும் நீண்ட தொடர்ச்சி உண்டு. சிறிய எண்ணிக்கையானவர்கள் ஒரு வீட்டில் கூடி, அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்களை அழைத்துக் கலந்துரையாடுகிறார்கள்.

மற்றொரு அமைப்பு யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் பழம் ரோட்டில் அமைந்திருக்கிறது. கலாநிதி சிதம்பரநாதனால் நிர்வாகிக்கப்படும் "பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம்" இதுவும் ஜனரஞ்சகமான ஒரமைப்பு அல்ல. ஆனால் சிறிய மற்றும் தொடர்ச்சியான சந்திப்புகளை, கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தும் ஒரமைப்பு.

ஊருணி : பாரம்பரிய ஆற்றுகைக் களம்



இன்று ஆவணி 22 வெள்ளிக்கிழமை மாலை 6.30
புடைவைக் கைத்தொழில் திணைக்கள வளாகத்தில்

காத்தான் கூத்துப் பாடல்கள்

ந.தவசோதிநாதன், ந.நவநீசன், செ.உதயகுமாரன், நா.கிருபாகரன்

உரையாடல்

நீர் வளமும் பொது நிலங்களும் – யாழ்ப்பாணத்து வெட்டைகள்

நிலாந்தன்

இது
WAXPAR மற்றும் வடக்கின் இளம் நீர் வாண்மையாளர்களின் இணை முயற்சி

இதுபோன்று யாழ் நகரை அண்டிய கோவில் வீதியில் அமைந்திருக்கும் சமகால கலை மற்றும் கட்டிடக்கலை வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தைக் குறிப்பிடலாம். இது துறைசார்ந்த நிபுணர்களையும் தமது துறைகளில் பிரகாசிப்பவர்களையும் அழைத்து உரையாடும் ஒரு களம். இதை உள்ளூர் ஆளுமைகளும் கலந்து கொள்வார்கள் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அந்த அடிப்படையில் இந்த அமைப்பு உள்ளூார் பரிமாணத்தையும் அனைத்துலகப் பரிமாணத்தையும் கொண்டது.

யாழ்ப்பாணம் நகரத்துக்கு வெளியே சற்று தொலைவில் சுழிபுரத்தில் ஓர் அமைப்பு உண்டு. "சத்தியமனை". அரசியல் சமூகச் செயற்பாட்டாளர் ஆகிய சுப்பிரமணியத்தின் நினைவாக உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு நினைவு நூலகம். இங்கேயும் சிறிய ஆனால் தொடர்ச்சியான சந்திப்புகள் அடிக்கடி இடம் பெறும். நகர்ப்புறங்களில் இருந்து விலகி ஒரு கிராமப்புறத்தில் சுழிபுரத்தில் அமைந்திருப்பது அதற்குள்ள மற்றொரு சிறப்பு.

இதுபோலவே அரங்கச் செயற்பாட்டாளர் தேவானந்தின் "செயற்திறன் அரங்கு" என்ற அமைப்பும் தொடர்ச்சி யாக இயங்கி வருகிறது. எங்கட புத்தகம் போல நம்மவர் முற்றம் என்று ஒரு அமைப்பும் செயற்படுகின்றது. அதுவும் கலை இலக்கிய அறிவியல் விவாதங்களை ஏற்பாடு செய்கின்றது.

அண்மை ஆண்டுகளாக தொடர்ச்சி யாக ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் பிரசுரித்து வரும் "எழுநா" என்ற அமைப்பு திருநெல்வேலியில் ராமநாதன் வீதியில் இயங்கி வருகின்றது. ஈழக் கற்கைகள் சார்ந்த ஆய்வு நிறுவனம் இது.

இவை சில உதாரணங்கள். தமிழ் பகுதிகளில் இயங்கும் எல்லா அமைப்புக் களையும் இக்கட்டுரை குறிப்பிடுகிறது என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. எனக்குத் தெரியாமலே பல்வேறு சந்திப்புகள் இடம்பெற முடியும். இப் பொழுது மட்டுமல்ல போர்க்காலங் களிலும் போர் கருக்கட்டிய காலங்களி லும் அதற்கு முன்னரும் பல தலைமுறைக ளாக இதுபோன்ற சந்திப்புகள் இடம் பெற்று வந்திருக்கின்றன. பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு சமூகத்தில் இது போன்ற சந்திப்பிடங்களே சமூக நொதியங்கள்.

போர்க் காலத்தில் மார்க் மாஸ்டரின் வீடு ஒரு தொகுதி ஓவியர்களின் சந்திப்பிடமாக இருந்தது. அச்சிறிய வீட்டின் சிறிய முன் விறாந்தையில் சந்தித்த பலர் பின்னாளில் துறை சார்ந்து மேலுயர்ந்தார்கள்.

மற்றொரு வீடு சிரித்திரன் ஆசிரியர் சுந்தருடையது. "மில்க்வைற்" கனகராசா போன்றவர்கள் அங்கு வருவார்கள். சுந்தரைப் பார்ப்பதற்குத் தொடர்ச்சியாக பல துறைகளைச் சேர்ந்தவர்களும் வருவார்கள்.

நாடகத்துறையில் குழந்தை.ம.சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்றவர்களின் வீடுகளும் அவ்வாறான சந்திப்பிடங்களாக இருந்தன. சண்முகலிங்கம் மாஸ்ரரின் கல்வியியல் அரங்குகளில் நடித்த, சண்முகலிங்கத்தின் வீட்டில் அடிக்கடி சந்தித்த பலர் பின்னாளில் துறை சார்ந்து மேலெழுந்தார்கள்.

ஊர்காவல்துறை கரம்பனைச்சேர்ந்தவர் சபாரட்ணம் மாஸ்ரர். இடப்பெயர்வின் பின் யாழ்ப்பாணத்தில் அவர் வசித்த பொழுது அவரை அடிக்கடி சந்தித்த ஒரு இளைய தலைமுறை இருந்தது.

மற்றது குகமூர்த்தியின் வீடு அல்லது ஏ.ஜே.கனகரட்ணா இருந்த வீடு. குகமூர்த்தி ஜனவசியம் மிக்க ஆள். இடது பாரம்பரியத்தில் வந்தவர். அதேசமயம் தமிழ்த் தேசியவாதிகளோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் வேலை செய்தவர். போர்க்காலத்தில் கொழும்பில் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர். ஏஜேயைத் தேடி வெவ்வேறு அரசியல் நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் வருவார்கள். இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் வருவார்கள். இயக்கங்களில் இருந்து விலகியவர்களும் வருவார்கள். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் மாத்தையாகவும் வருவார். பின்னாளில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பைச் செய்தவர்களில் ஒருவராகிய ராஜன் கூலும் வருவார். தமிழ்த் தேசிய அரசியலின் பல்வகைமையைப் பிரதிபலித்த ஒரு வீடு அது.

மற்றொரு வீடு நாவலர் வீதியில் அமைந்திருந்த ராஜசிங்கம் மாஸ்டர் வீடு. இயக்கங்கள் வளர்ச்சி அடையத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து இயக்கங்களுக்கு எதிரான விமர்சனங்கள் மேலெழுந்த காலகட்டம் வரையிலுமான கலந்துரையாடல் களமாக அந்த வீடு இருந்திருக்கிறது.

> யாழ்ப்பாணத்தில் இளம் நீர் வாண்மையாளர்களைப் போல இலக்கியவாதிகள், துறைசார் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆங்காங்கே சிறிய அளவில் கூடி தமது துறைசார் விடயங்களை உரையாடும் பல்வேறு சந்திப்பிடங்கள் உண்டு.

மற்றொரு வீடு மூ.திருநாவுக்கரசுவினுடையது. சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் அவருடைய வீட்டுக்குப் போவார்கள். இரவு பகலாக இருந்து கதைப்பார்கள். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசியல் உரையாடல்கள் அதிகம் நிகழ்ந்த வீடுகளில் அதுவும் ஒன்று.

அப்படித்தான் மற்றொரு பொது இடம், யாழ்.மறைக்கல்வி நிலையம். 2009க்குப் பின்னரான அதிகளவு அரசியல் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் நிகழ்ந்த இடங்களில் அது முக்கியமானது.

மேற்கண்டவை சில உதாரணங்கள். ஈழத் தமிழ்ச் சமூகத்தைச் செதுக்கிய, தீர்மானித்த பலரைச் செதுக்கிய, உருத்திரட்டிய களங்கள் அவை. ஒருவகையில் பின்னாளில் மேலெழுந்த பல போக்குகள் கருகட்டிய இடங்கள் அவை. எதிர்காலத்தை நொதிக்க வைத்த சமூக நொதிப்பிடங்கள் அவை.

போர்க்காலத்தில் பாதுகாப்பற்ற வீடுகளின், சிறிய அல்லது பெரிய முன் விறாந்தைகளில், ஒரு குவளை பால் இல்லாத வெறுந் தேனீரோடு உரையாடப்பட்ட பல விடியங்கள்தான் பின்னாளில் சமூகத்தின் உயிர்நிலையான விடயங்களைத் தீர்மானித்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கேள்வி: ஓர் அறிவுச் சமூகம் எப்படியிருக்க வேண்டும்?



யதீந்திரா

ஈழத் தமிழர்களின் யூதக் கனவு என்னும் தலைப்பில் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். 2009ல் ஏற்பட்ட அழிவு, அதனைத் தொடர்ந்து தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்த ஈழத் தமிழர் அரசியலை முன்வைத்தே அதனை எழுதியிருந்தேன். இன்று நிலைமை அப்போதிருந்ததை விடவும் இன்னும் மோசமாகியுள்ளது. முன்னர் யாரோ எழுதியதை படித்த நினைவுண்டு. உலகில் ஜே எழுத்தில் ஆரம்பிக்கும் பெயரிலுள்ள மூன்று இனங்கள் அறிவில் உச்சமாம் - ஒன்று யூதர்கள், அடுத்தது யப்பானியர்கள் மற்றையது யாழ்ப்பாண சமூகம். உண்மையில் இதனை எழுதியவர் யாரென்று இன்னும் நான் அறியவில்லை. ஆனால் அந்த அரசியல் வடிவேலுவை கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும் என்றே



ஆசை மேலோங்குகின்றது.

குறித்த நபரை அறிந்தவர்கள் தயவு செய்து சொல்லுங்கள். இணைய ஊடகங்களில் அரசியல் ஆய்வுகள் என்னும் தலைப்பில் வெளிவரும் விடயங்களை பார்த்தால், இத்தனை அறிவாளிகள் இருந்தும் ஏன் பிரபாகரன் அழிவுப் பாதையில் சென்றார் என்னும் கேள்வியே நம்மை தொந்தரவு செய்யும். இராணுவ ஆய்வாளர்கள், படைத்துறை ஆய்வாளர்கள் என்னும் அடையாளங்களுடன் வருபவர்களின் கருத்துக்களை அவதானித்தால், உலகின் தலைசிறந்த உளவுத்துறைகளான சி.ஐ.ஏ., மொசாட், எம்.ஐ-6, றோ போன்றவைகள் அனைத்தும், இவர்களிடம் சொல்லிவிட்டுத்தான் திட்டங்களை வகுக்கின்றார்கள் போலும். மனச் சோர்விற்குள்ளாகியிருப்பவர்கள் நகைச் சுவைகளை ரசிப்பதுண்டு, அவ்வாறானவர்கள் இப்படியான ஆய்வுகளை கட்டாயம் கேட்க வேண்டும்.

இவ்வாறானவர்களது இன்னொரு பெரிய கண்டுபிடிப்புத்தான் பிரபாகரன் இருக்கின்றாரா அல்லது இல்லையா என்பதற்கு பின்னால் பெரிய சதியொன்று இருக்கின்றதாம். யாரோ பின்னுக்கிருந்து இயக்குகின்றார்களாம். அதாவது, ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு சக்தியாக எழுச்சி கொள்வதை தடுக்க வேண்டிய தேவை சில உளவுத்துறைகளுக்குண்டாம். அதனால்தான் இவ்வாறான விடயங்கள் நடக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக இருந்த பிரபாகரன் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்டார். உலகில் பல பாகங்களிலும், இராணுவத்திற்கு எதிரான போர்களில் கெரில்லா இயக்கத் தலைவர்கள் பலர் இறந்திருக்கின்றார்கள். பிரபாகரனும் அப்படித்தான் தன்னால் முடிந்த வரையில் சண்டையிட்டு இறந்தார். பின்னர் அவரது உடல் காண்பிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்டு விடயத்தை முடித்திருந்தால், அதன் பின்னர் ஏற்பட்ட தேவையற்ற சர்ச்சைகளை, உள்ளக அடிபிடிகளை தவிர்த்திருக்கலாம். இதிலுள்ள உச்சக்கட்ட நகைச் சுவை என்னவென்றால் பிரபாகரன் நேற்றுத்தான் என்னோடு பேசினார் என்று பழ நெடுமாறன் கூறிக்கொண்டிருந்தமை. பிரபாகரன் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டே இப்படியான பொய்களை கூறியவர்கள், பிரபாகரன் உயிரோடு இருக்கும் போது எப்படியான புனை கதைகளையெல்லாம் சொல்லியிருப்பார்கள் - தம்பி விடக் கூடாது, நாங்கள் இருக்கின்றோம், புதுடில்லியை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்றுதானே உசுப்பியேற்றியிருப்பார்கள்.

2009இற்கு பின்னரான அரசியல் ஒரு நகைச் சுவைக் காட்சியாவே நகர்ந்தது. உண்மை மூடி மறைத்து, இருக்கின்றார், வருவார், நேற்றுத்தான் பேசியவர், அவரது மகள் தலைமை தாங்க வருகின்றார் என்றெல்லாம் கூறியதால்தானே இந்த விடயம் இந்தளவிற்குச் சிக்கலானது. இதில் எங்கு உளவுத் துறைகள் இருக்கின்றன? அரசியல் அறிவை விடுவோம் - அதற்கு கொஞ்சமாவது படிக்க வேண்டும், பின்னர் சிந்திக்க வேண்டும்.

ஆனால் அனைவருக்கும் மூளை இருக்கின்றதல்லவா, உண்மையிலேயே பிரபாகரன் இருக்கின்றார் என்னும் ஒரு கதை இலங்கையின் உளவுத் துறைக்கு தேவைப்பட்டிருந்தால் அல்லது வேறு ஏதேனும் உளவுத் துறைகளுக்கு தேவைப்பட்டிருந்தால், பிரபாகரனின் இறுதி நாட்கள் பற்றி தகவல்களை மறைத்து, அவரைத் தேடிக் கொண்டிருக்கின்றோம் என்ற ஒரு கதையுடன் அல்லவா யுத்தத்தை முடித்திருப்பார்கள். எதற்காக அவரது உடலைக் காண்பித்து உண்மையை சொல்ல வேண்டும்? இதிலிருந்தே புரிந்திருக்க வேண்டுமே - இலங்கையின் வெற்றிக்கு பிரபாகரனின் இறப்பு பற்றி உண்மையே தேவைப்பட்டது, அவர் இருக்கின்றார் என்னும் பொய் அவர்களுக்குத் தேவைப்படவில்லை. சதிகளுக்குத்தான் எப்போதும் பொய் தேவைப்படும்.

காலம் கடந்தாயினும் தாங்கள் தவறான பாதையில் செல்கின்றோம், சொந்த மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம் என்னும் குற்றவுணர்விற்கு ஆட்பட்ட சிலர், அண்மையில் பிரபாகரனின் இறப்பை அறிவித்து, அவருக்கான இறுதி நிகழ்வை செய்திருந்தனர். பின்னர் அது பற்றியும் சதிக் கதைகள் புனையப்பட்டது. எல்லாவற்றுக்குப் பின்னாலும் சதிகள்தான் என்றால் புலம்பெயர்ந்தவர்கள் நல்லூர் ஆலய வழிபாடுகளுக்காக பல்லாயிரக் கணக்கில் இலங்கை வருவதும் கூட சதிதானே! ஏனெனில் அவர்களது வருகையால், இலங்கையின் அன்னியச் செலவாணி கையிருப்பு அதிகரிக்கின்றதல்லவா எனவே நல்லூர் ஆலய வழிபாட்டில் பங்குகொண்டவர்கள் அனைவரும் துரோகிகள் என்றல்லாவா கணக்கை முடிக்க வேண்டிவரும். தமிழ் சமூகம் தங்களின் பொதுவான அறிதலின் அடிப்படையில் விடயங்கள் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்க்கப் பழக வேண்டும். ஒரு சமூகம் தான் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர முடியாமல் இருக்கின்றது என்றால், அது ஒரு அறிவுபூர்வமான சமூகமாக இருக்கவே முடியாது.

> ஒரு அறிவுச் சமூகம் எப்படியிருக்கும்? அது பொய்களை எதிர்க்கும் - யதார்த்தத்தின் பக்கமாகவே எப்போதும் நிற்கும் - போலித்தனங்களை கண்டு கோபமடையும் - எதிரி- துரோகி- தியாகி என்னும் சொற்களுடன் தனது ஆற்றலை வீணாக்காது. ஏனெனில் அரசியலில் நிரந்தர எதிரிகள், நிரந்தர நண்பர்கள் என்று எவரும் இல்லை

இந்தக் கட்டுரையாளர் முன்னரும் எழுத்தியிருக்கின்றார். அதனை மீளவும் சொல்வதாயின். ஈழத் தமிழ் மத்தியதர வர்க்கம் தனிமனிதர்களாக ஆற்றலுள்ளவர்கள். தங்களின் குடும்பம், எதிர்காலம் தொடர்பில் நன்கு கணக்குப் போட்டு செயற்படும் ஆற்றலுள்ளவர்கள். இந்த தனிநபர் கணக்கினால்தான், இன்று மேற்குலக தலைநகரங்கள் தோறும் சொந்த வீடுகளில் வாழ்கின்றார்கள். முப்பது வருடங்களுக்கு முன்னர், ஆங்கிலத்தில் வார்த்தைகளை உச்சரிக்கக் கூடத் தெரியாமல் மேற்குலகின் வீதிகளை விழி பிதுங்கி நின்றவர்கள் இன்றோ, பணக்கார நாடுகளின் தலைநகரங்களில் இரண்டு மூன்று வீடுகளுடன் இருக்கின்றனர் என்றால், அதற்கு நிச்சயம் கெட்டித்தனம் தேவை. ஆனால் இந்தத் கெட்டித்தனம் ஒரு கூட்டுக் கெட்டித்தனமாக இன்று வரையில் வளர்சியுறவில்லை. அது வளர்ச்சியுறும் என்னும் நம்பிக்கை இந்தக் கட்டுரையாளருக்கு இல்லை ஏனெ னில் கடந்த பதினாறு வருடங்களில் அதற்கான சிறிய அறிகுறியைக் கூட காண முடியவில்லை.

ஓர் அறிவுச் சமூகம் எப்படியிருக்கும்? அது பொய்களை எதிர்க்கும் - யதார்த்தத்தின் பக்கமாகவே எப்போதும் நிற்கும் - போலித்தனங்களை கண்டு கோபமடையும் - எதிரி- துரோகி- தியாகி என்னும் சொற்களுடன் தனது ஆற்றலை வீணாக்காது. ஏனெனில் அரசியலில் நிரந்தர எதிரிகள், நிரந்தர நண்பர்கள் என்று எவரும் இல்லை - தங்களுக்கு தலைமை தாங்குபவர்களை சாதிகளால், ஊர்களால் அளவிடாது மாறாக அவர்களை ஆற்றலால், ஆளுமையால் நிறுத்துப் பார்க்கும் - ஏனெனில் ஒரு மனிதன் அவனது செயல்களால் அள விடப்பட வேண்டுமேயொழிய அவனது பிறப்பினாரல் அல்ல (கௌடில்யர்) - அறிவுச் சமூகமாது எப்போதும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் போது, கடந்த காலத்தை உற்று நோக்கும் - கடந்த காலத்தின் படிப்பினைகளிலிருந்தே நிகழ்காலத்தை அளவிடும் - ஏனெனில் ஒரு சமூகம் நிகழ்காலத்தை எவ்வாறு கையாளுகின்றது என்பதிலி ருந்துதான் அதற்கான எதிர்காலத்தை அதனால் ஆக்கிக் கொள்ள முடியும்.

அடிப்படையில் ஒரு சமூகத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் அதன் தீர்மானங்களினாலேயே நிகழ்கின்றது - அதாவது தீதும் நன்றும் பிறர் தருவதில்லை. ஈழத் தமிழ் அரசியல் வரலாறு முழுவதிலுமான தோல்விக்கு யார் காரணம்? ஒவ்வொரு காலகட்டங்களிலும் அரசியலை தங்களின் தோள் மீது சுமந்தவர்களே காரணம். வேறு எவரும் அல்லர் - இந்த அடிப்படையில் சிந்தித்தால் நமக்கு எவரும் எதிரியல்ல - ஒவ்வொருவரும் அவர்களது நலன்களுக்காக செயற்படும் உலகில், நமது நலன்களுக் காக, நாம் எவ்வாறு செயற்படப் போகின்றோம் என்னும் கேள்வி மட்டுமே நமக்கு முன்னால் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “234 தொகுதிகளிலும் விஜயே வேட்பாளர்”: த.வெ.க.வின் கதாநாயக அரசியல் பலன் தருமா?

- முரளிதரன் காசிவிஸ்வநாதன்

கடந்த வியாழக்கிழமையன்று மதுரையில் நடந்து முடிந்த தமிழக வெற்றிக் கழகத்தின் கூட்டத்தில் அக்கட்சித் தலைவர் விஜய் தனது பேச்சில் எம்.ஜி. ஆரைத் தூக்கிப்பிடித்திருக்கிறார். அதே நேரத்தில் தற்போதைய அ.தி.மு.கவை விமர்சித்திருக்கிறார். பஞ்ச் வசனங்கள், குட்டிக் கதை, சிங்கத்தோடு ஒப்பீடு என விஜய்யின் பேச்சு நகர்ந்தது குறித்த விமர்சனங்களும் இருக்கின்றன. தி.மு.கவுக்கு எதிரான முக்கிய சக்தியாக த.வெ.கவை முன்னிறுத்த விரும்பும் விஜய்யால் அதனைச் சாதிக்க முடியுமா என்ற கேள்வியை இது எழுப்பியிருக்கிறது.

நடிகர் விஜய் கட்சி துவங்கியதற்குப் பிந்தைய முதல் மாநாடு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் தேதி விக்கிரவாண்டியில் நடைபெற்றது. இதற்கு அடுத்த மாநாட்டை மதுரையில் நடத்த முடிவுசெய்யப்பட்டது. ஆகஸ்ட் 25ஆம் தேதி இந்த மாநாட்டை மதுரையில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், விநாயக சதுர்த்தி நெருங்குவதால் காவல் துறை தேதியை மாற்றும்படி கோரியதால் மாநாடு ஆகஸ்ட் 21ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.

கட்சி துவங்கிய பிறகு த.வெ.கவின் இரண்டாவது மிகப் பெரிய பொதுக் கூட்டம் என்பதால் இது தொடர்பான எதிர்பார்ப்புகள் ஏகத்திற்கும் இருந்தன. விக்கிரவாண்டி மாநாட்டிலேயே த.வெ.கவின் அடிப்படையான விஷயங்களை விஜய் தெளிவுபடுத்தியிருந்தார். கொள்கைத் தலைவர்கள் யார் யார், சித்தாந்த எதிரி யார், அரசியல் எதிரி யார் என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசிய விஜய், “கொள்கை கோட்பாட்டளவில் திராவிடம், தமிழ் தேசியம் ஆகிய இரண்டுக்கும் பிரிவினை இல்லை, இரண்டும் நமது இரண்டு கண்கள்” என்று குறிப்பிட்டார்.

மேலும், “2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தனிப் பெரும்பான்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. இருந்தாலும், நம்மோடு கூட்டணி வைப்பவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கீடும், அதிகாரப் பகிர்வும் கொடுப்போம்” என்றதோடு, “பிளவுவாத அரசியலையும், ஊழல் மலிந்த அரசியல் கலாசாரத்தையும் எதிர்க்கப் போவதாகவும்” தெரிவித்தார்.

ஆகவே, இந்த மாநாட்டில் என்னென்ன விஷயங்களை விஜய் பேசப் போகிறார் என்ற எதிர்ப்பார்ப்பு எல்லா மட்டங்களிலுமே இருந்தது. இந்த மாநாட்டிற்கு என முதல் நாளே மதுரைக்கு வந்து குவிந்திருந்த தொண்டர்கள் மத்தியில் “ராம்ப் வாக்” செய்த விஜய், மாலை 4.50 மணியளவில் பேச ஆரம்பித்தார். முக்கியத் தலைவர்கள் பெயரைக் குறிப்பிட்டு சம்பிரதாயமான முறையில் தனது உரையைத் துவங்காமல் நேரடியாகப் பேச்சைத் துவங்கினார் விஜய்.

பேச்சின் துவக்கத்திலேயே தன்னை சிங்கத்தோடு ஒப்பிட்டுப் பேசிய அவர், பிறகு அரசியலுக்குள் வந்தார். அ.தி.மு.கவின் நிறுவனர் எம்.ஜி.ஆரையும் தே.மு.தி.க. நிறுவனர் விஜயகாந்தையும் புகழ்ச்சியாகக் குறிப்பிட்டார். “சினிமாவிலும், அரசியலிலும் எனக்கு மிகவும் பிடித்தவர் எம்ஜிஆர். அவரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை ஆனால், அவருடைய குணம் கொண்ட இந்த மதுரை மண்ணில் பிறந்த விஜயகாந்த்துடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது” என்றார்.

தங்களது கொள்கை எதிரி பா.ஜ.க. என்றும் அரசியல் எதிரி தி.மு.க. என்பதையும் மீண்டும் குறிப்பிட்டவர், தி.மு.கவையும் பா.ஜ.கவையும் விமர்சித்துப் பேசினார். இதற்குப் பிறகு, எம்.ஜி.ஆரைப் பற்றியும் அ.தி.மு.கவின் தற்போதைய நிலையைப் பற்றியும் பேசினார் விஜய்.

“எம்ஜிஆர்னா யாரு தெரியும்ல, அவர் மாஸ்னா என்னானு தெரியும்ல, அவர் உயிரோடு இருக்கும் வரைக்கும் அந்த சி.எம். சீட்டப் பத்தி ஒருத்தராலையும் நினைச்சுக்கூட பார்க்க முடியல. கனவுகூட காண முடியல. எப்படியாவது அந்த சி.எம். சீட்டை என்கிட்ட கொடுத்திருங்க, என் நண்பர் எம்.ஜி.ஆர். திரும்ப வந்த பிறகு திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்று தன் எதிரியைக்கூட மக்களிடம் கெஞ்ச வைத்தவர். ஆனால், இப்போ அவர் ஆரம்பித்த அந்தக் கட்சியை கட்டிக் காப்பது யாரு? இன்று அந்தக் கட்சி எப்படியிருக்குது?”

“அப்பாவித் தொண்டர்கள் வெளியில் சொல்ல முடியாம வேதனையில் தவிக்கிறார்கள். 2026ல சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு ஓட்டுப்போடனும்னு, எப்படிப்பட்ட ஆட்சி இங்க அமையனும்னு அந்த அப்பழுக்கற்ற தொண்டர்களுக்கு நல்லாவே தெரியும். பொருந்தாத கூட்டணியாக பா.ஜ.க. கூட்டணி இருக்கிறது. தி.மு.க. அவர்களோடு மறைமுக உறவுவைத்துக்கொண்டிருக்கிறது” என்று அவர் பேசிய பேச்சு, அ.தி.மு.கவின் வாக்குகளை தன் பக்கம் ஈர்க்கும் நோக்கத்தில் இருந்ததைப் போலவே அமைந்திருந்தது.

விஜய் பேசி முடித்த பிறகு உடனடியாக கூட்டம் முடிவுக்கு வந்தது. விஜய்யின் இந்த இரண்டாவது கூட்டத்திற்கு தமிழ்நாட்டின் ஊடகங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன. பெரும்பாலான தொலைக்காட்சிகள் நாள் முழுவதும் பொதுக்கூட்ட அரங்கை நேரலை செய்தன. விக்கிரவாண்டி பொதுக்கூட்டத்திற்குக் கூடியதைப் போலவே பெரும் எண்ணிக்கையிலான தொண்டர்கள் இந்தக் கூட்டத்திற்கும் திரண்டனர்.

ஆனால், விஜய்யின் அரசியல் தொடர்பாக நடக்கும் விவாதங்கள் அதிர்ச்சியளிப்பதாகச் சொல்கிறார் முன்னாள் பேராசிரியர் அ. ராமசாமி. “விஜய்க்கு வரும் கூட்டம் அரசியல்படாத கூட்டமாகத்தான் இருக்கிறது. இந்த மாநாட்டிற்கு வந்த அக்கட்சித் தொண்டர்களில் பலர் ஊடகங்களில் பேசும்போது, விஜய்யைப் பார்ப்பதற்காக மட்டுமே வந்ததாகவே சொன்னார்கள். அவர் என்ன மாற்றத்தைச் செய்வார், என்னென்ன விஷயங்





களை மாற்றியமைப்பார், எதனால் அவரை ஆதரிக்கிறோம் என்பதைப் பற்றியே அவர்கள் பேசவில்லை.” என்று குறிப்பிட்டார்.

மேலும், “இதில் அதிர்ச்சியளிக்கும் விஷயம் என்னவென்றால், இப்படி எந்த அரசியலும் இல்லாமல் தொண்டர்கள் இருப்பதை தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் பலரும் நல்ல விஷயம்போல பேச ஆரம்பித்திருப்பதுதான். அரசியல்படாத தன்மையே சிறப்பு என்று பேசும் சூழல் தமிழ்நாட்டில் வந்துவிட்டது ஆச்சரியமளிக்கிறது” என்கிறார் அ. ராமசாமி.

விஜய்யின் பேச்சில் பலரையும் கவனிக்க வைத்த ஒரு விஷயம், தான் எந்தத் தொகுதியில் போட்டியிடப் போகிறேன் என்று பேசியதுதான். தான் மதுரை கிழக்குத் தொகுதியில் போட்டியிடப்போவதாக துவங்கியவர், பிறகு தமிழ்நாட்டின் எல்லாத் தொகுதியிலும் தானே போட்டியிடுவதாக கருத வேண்டும் என்று குறிப்பிட்டார். இது பெரும் அதிர்ச்சியளிப்பதாகக் கூறுகிறார் தில்லியைச் சேர்ந்த பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன்.

“234 தொகுதியிலும் நானே நிற்பதாகக் கருத வேண்டும் என்று சொல்வது மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. ஆனால், அந்தக் கட்சியே அப்படித்தான் இருக்கிறது. இது அடிப்படையிலேயே தவறு. அ.தி.மு.க., தி.மு.க. போன்ற கட்சிகள் சிறு பேச்சாளர்களை வைத்து தெரு முனைக் கூட்டங்களை நடத்தி பிரச்சனைகளை விளக்குகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள எல்லா கட்சிகளிலுமே இதுபோல ஆட்கள் இருக்கிறார்கள். இந்தக் கட்சியில் அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.” என்று விமர்சித்தார்.

மேலும், “இப்போது மாநாடு என்று சொல்லிவிட்டு, கட்சியின் முக்கியப் பிரமுகர்களே 2-3 நிமிடங்கள்தான் பேசுகிறார்கள். அப்படிப் பேசுபவர்களும் பள்ளிக்கூடங்களில் பேசும் குழந்தைகள் ரேஞ்சிற்குத்தான் பேசுகிறார்கள். தங்கள் கட்சியினருக்கு அது போதுமென நினைக்கிறார்கள் போலிருக்கிறது” என்றும் கடுமையாக விமர்சிக்கி றார் ராஜன் குறை.

இந்த மாநாட்டில், விஜய் எம்.ஜி.ஆர். குறித்துப் பேசியதும் அ.தி.மு.க. குறித்துப் பேசியதும் எதிர்பார்த்ததைப் போலவே, கடுமையான எதிர்வினைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

சுற்றுப் பயணத்தில் இருந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி காஞ்சிபுரத்தில் பேசும்போது, “யாரெல்லாம் புதிய கட்சி தொடங்குகிறார்களோ அவர்களும் நம் தலைவர்களை சொல்லித்தான் கட்சியைத் துவங்க முடியும். சிலர், அ.தி.மு.க. யார் கையில் இருக்கிறது என்று கேட்கிறார்கள். இதுகூடத் தெரியாமல் கட்சிக்குத் தலைவராக இருந்தால், உங்களை நம்பி எப்படி தொண்டர்கள் இருப்பார்கள்?” என்றார்.

விஜய்யைப் பொறுத்தவரை, எம்.ஜி.ஆரைப் போல தன்னை ஒரு பெர்சனாலிட்டியாக முன்வைத்து வாக்குகளைக் கோர நினைத்தாலும் அது சுலபமல்ல என்கிறார் அ. ராமசாமி.

“விஜய்யைப் பொறுத்தவரை அவர் தன் “பெர்சனாலிட்டியை“ சார்ந்தே அரசியல் செய்ய விரும்புகிறார். அதாவது, தமிழக அரசியலில் எம்.ஜி.ஆரைப் போல, விஜயகாந்தைப் போல தன்னை ஒரு முகமாக முன்வைக்க விரும்புகிறார். அதனால்தான், அவர் எம்.ஜி. ஆரை, விஜயகாந்தை தன் மேடையில் குறிப்பிடுகிறார். நான் கிழக்குத் தொகுதியில் நிற்கப்போகிறேன் என்று ஆரம்பித்து, தமிழ்நாடு முழுக்க நானே நிற்கப் போகிறேன் என்று சொல்கிறார். இது முழுக்க முழுக்க பெர்சனாலிட்டி சார்ந்த அரசியல்.” என்று கூறுகிறார் அவர்.

“அ.தி.மு.கவினரின் வாக்குகளை விஜய் பெறுவதற்கு வாய்ப்பே கிடையாது“ எனக் குறிப்பிட்ட அ. ராமசாமி, “காரணம், அ.தி.மு.கவில் தற்போது உள்ள வாக்குகள், இவருக்கு இலக்காகக்கூடிய வாக்குகள் அல்ல. இவருக்கு இலக்காகக்கூடிய 35 வயதுக்குக் கீழே உள்ளவர்களின் வாக்குகளை அ.தி.மு.க. ஏற்கனவே இழந்துவிட்டது. அவர்களில் பலர் நாம் தமிழருக்கு போய்விட்டார்கள். மற்றொரு பக்கம் தி.மு.கவில் இளைஞரணியை வலுப்படுத்தியிருக்கிறார்கள்.” என்கிறார்.

“வி.சி.கவில் உள்ள இளைஞர்களைப் பொறுத்தவரை, அவர்கள் திருமாவளவன் யாருக்கு வாக்களிக்கச் சொல்கிறாரோ அவருக்கே வாக்களிப்பார்கள். அவர்களைப் பொறுத்தவரை சினிமா பார்ப்பது வேறு, வாக்களிப்பது வேறு. ஆகவே விஜய் நினைப்பது நடக்காது” என்கிறார் அ. ராமசாமி.

ராஜன் குறையும் அப்படியே கருதுகிறார். “எம்.ஜி.ஆரைக் குறிப்பிட்டுப் பேசுவதன் மூலம், எடப்பாடி கவர்ச்சியான தலைவரில்லை என்று நினைப்பவர்களைத் தன் பக்கம் ஈர்க்க நினைக்கிறார் விஜய்.” என்கிறார்.

தொடர்ந்து பேசிய ராஜன், “ஆனால், அ.தி.மு.க. அடிப்படையில் வலுவான கட்டமைப்பைக் கொண்ட கட்சி. அவர்கள் தலைவர்கள் இல்லாமலேயே பிரச்னைகளை பேசுவார்கள். சமயங்களில் தலைவர்களைத் தாண்டியும் பேசுவார்கள். இங்கே யார் அப்படியிருக்கிறார்கள்? தவிர, சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் யார் போட்டியிடுகிறார்கள் என்பது முக்கியம்.”

“பெரும்பாலும் எல்லாக் கட்சிகளும் உள்ளூர் முகமாக, செல்வாக்கு உள்ளவர்களாக பார்த்து வேட்பாளர்களாக நியமிப்பார்கள். எல்லாத் தொகுதியிலும் யாரையாவது நிறுத்துவேன், நானே நின்றதாக நினைத்து வாக்களியுங்கள் என்றால் அது மக்களாட்சியே இல்லை. இது அவருக்குப் புரிந்த மாதிரியே தெரியவில்லை” என்கிறார்.

2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட தே.மு.தி.க. 8.38 வீத வாக்குகளைப் பெற்றது. 2009ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சியின் வாக்கு சதவீதம் 10.29 வீதமாக அதிகரித்து.

ஆனால், இந்த சாத்தியம் குறித்து சந்தேகம் எழுப்பும் அ. ராமசாமி எம்.ஜி.ஆர். குறித்த பேச்சினால் வேறு சில நன்மைகள் நடக்கலாம் என்கிறார். “எடப்பாடி பழனிச்சாமி யுடன் இருப்பவர்களில், பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. சேர்ந்ததில் அதிருப்தியில் இருப்பவர்கள் இருப்பார்கள். விஜய் எம்.ஜி.ஆரைப் போலத் தெரிகிறார் என்று கூறி, அவர்களில் சிலர் விஜய் கட்சியில் சென்று சேரலாம்.

அவரது கட்சியில் தமிழ்நாடு முழுவதும் தெரிந்த முகங்கள் குறைவாக இருக்கும் நிலையில், இதுபோல ஆட்கள் சென்று சேர்வது, அவருக்கு பலனளிக்கும். த.வெ.கவைப் பொறுத்தவரை இதுவே போதுமானதுதான்” என்கிறார் அவர்.

இதற்கிடையில் மாநாடு நிறைவுக்கு வந்த நிலையில், மாநாட்டுத் தீர்மானங்களை அறிக்கையாக வெளியிட்டது அக்கட்சி. அந்த அறிக்கையில், பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிர்ப்பு, சுந்திரமான, நியாயமான முறையில் தேர்தல் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும், தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படும் விவகாரம், ஆணவக் கொலைகளைத் தடுக்கத் தனிச் சட்டம், சட்டம் - ஒழுங்கு சீர் குலைவிற்கு தி.மு.க. அரசுக்குக் கண்டனம் போன்ற விஷயங்கள் இடம்பெற்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் மீண்டும் ஆட்சி மாற்றம்? அமெரிக்காவுடன் வலுக்கும் இராணுவ உறவு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




பெரும் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு, ஆட்சி மாற்றம் அல்லது ஆட்சி கவிழ்ப்பு என்ற செய்திகள் எல்லாம் இடிக்கு மேல் இடியாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சி மாற்ற செய்திகள் பாதிப்புற்ற மக்களுக்கு எந்தவிதமான ஆறுதலும் அளிக்கப் போவதில்லை என்பது திடமான உண்மையாகும்.

பாகிஸ்தானில் மீண்டும் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பலரும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக இந்திய ஊடக பரப்பில் பல செய்திகள் வெளியாகி வருகின்றன.

இதற்கு வலுச்சேர்ப்பது போல, இராணுவத் தளபதி அசிம் முனிரின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. குறிப்பாக அவரின் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன், அவருடன் நெருக்கமான உறவைப் பேணி வருகிறார்.

சில வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாகவும் அவர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டதுடன் ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இது பாகிஸ்தானில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் ஆழமான விவாதத்தை ஏற்படுத்தியது

பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற 1947ல்



இருந்து, நான்கு முறை இராணுவ தளபதிகள் ஆட்சியை கவிழ்த்து அதிகாரத்திற்கு வந்துள்ளனர். தற்போது, பாகிஸ்தான் இராணுவ தளபதியாக அசிம் முனீர் உள்ளார்.

அசிம் முனீர் அதிகாரத்தை கைப்பற்ற கூடும் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் அந்த நாட்டின் இராணுவ அதிகாரிகளுடனான அசிம் முனீரின் தொடர்பு, சீனாவுடனும் நெருக்கம் போன்ற காரணங்களால், ஷெபாஸ் ஷெரீப் அரசை கவிழ்த்துவிட்டு, அசிம் முனீர் அதிகாரத்தை கைப்பற்ற கூடும் என்ற தகவல் கசிந்துள்ளது.

அரசியலில் பாகிஸ்தான் இராணுவ தளபதி குதிக்கின்றார் என்று பல இந்திய ஊடகங்களில் செய்திகள் பலவலாக வெளியாகி உள்ளன.

பாகிஸ்தானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அரசியலில் நுழையும் திட்டம் ஏதுமில்லை, அவை வதந்திகள் என அந்நாட்டின் இராணுவ தளபதி அசிம் முனீர் கூறியிருந்தாலும், பாரிய வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்த செய்தி ஆறுதல் அளிக்கப் போவதில்லை.

கடவுள் என்னை இந்த நாட்டின் பாதுகாவலராக ஆக்கியுள்ளார். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறேன் என்பது புனையப்பட்டவை. பாகிஸ்தானை சீர்குலைக்க முயற்சிப்பவர்களால் இது போன்ற செய்தி பரப்பப்படுகிறது என்று, இராணுவ தளபதி அசிம் முனீர் சமீபத்தில் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள பாகிஸ்தான் அதிபரும் பிரதமரும் மாற்றப்படப் போவதாக வெளியாகும் செய்தியில் உண்மை இல்லை என்றும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

**ஒப்ரேஷன் சிந்தூர் பின் அரசியல் மாற்றம்**

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஒப்ரேஷன் சிந்தூருக்குப் பிறகு அந்நாட்டின் அரசியலில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஒப்ரேஷன் சிந்தூருக்குப் பிறகு உடனடியாக இராணுவத் தளபதி அசிம் முனீர் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து சில வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாகவும் அவர் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார். இது பாகிஸ்தானில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் ஆழமான விவாதத்தை ஏற்படுத்தியது.


ஏற்கனவே, பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரிக்கும் தளபதி அசிம் முனிருக்கும் இடையே கருத்து மோதல்கள் நிலவி வருவதாக செய்திகள் வெளியாகின. தற்போது, பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புக்கும் அசிம் முனிருக்கும் இடையேயும் மோதல் போக்கு நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த பின்னணியில், பாகிஸ்தானில் அதிபர் மற்றும் பிரதமரை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல செய்திகள் வெளியாகி வருகின்றன.

**இந்தியா - ஆப்கானுக்கு எதிரான நிலை**

ஆட்சி மாற்றம் பற்றி பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். ஆனாலும் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இராணுவ தளபதி அசிம் முனீர் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் அமைதியை சீர்குலைக்க இந்தியா பினாமிகளைப் பயன்படுத்துகிறது. ஆப்கானியர்களுக்கு நாங்கள் பல ஆண்டுகளாக கருணையையும் சலுகைகளையும் காட்டினோம். ஆனால், அவர்கள் இந்தியாவுடன் இணைந்து எங்களுக்கு எதிராக சதி திட்டம் தீட்டுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

கடவுள் என்னை பாகிஸ்தான் நாட்டின் பாதுகாவலராக ஆக்கியுள்ளார்.



அதைத் தவிர வேறு எந்தப் பதவியையும் நான் விரும்பவில்லை. நான் ஒரு ராணுவ வீரன். எனது மிகப் பெரிய ஆசை நாட்டுக்காக உயிர்துறப்பதே என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அரிய கனிமங்கள் உள்ளன. இந்த புதையல்களை பயன்படுத்துவதன் மூலம் பாகிஸ்தானின் கடனை பெருமளவில் குறைக்க முடியும். மேலும், விரைவில் பாகிஸ்தானும் வளமான சமூகங்களில் ஒன்றாக மாறும்.

மேலும் ரெக்கோ டிக் சுரங்கத் திட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டு முதல் பாகிஸ்தான் ஆண்டுதோறும் குறைந்தது இரண்டு பில்லியன் டாலர் நிகர லாபம் ஈட்டும். இந்த தொகை ஆண்டுதோறும் அதிகரிக்கும். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே பாகிஸ்தான் சம நிலையை கடைப்பிடிக்கும். ஒரு நண்பருக்காக நாங்கள் மற்றொரு நண்பரை தியாகம் செய்ய மாட்டோம் என்றும் அசிம் முனீர் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்க பாகிஸ்தான் வலுவான உறவு**

இந்தியாவுடன் ஐம்பது வீத வரி விதித்து முரண்படும் அமெரிக்கா, இப்போது பாகிஸ்தானுக்கு எதிராக அதன் வரிகளை குறைத்து கடைப்பிடித்துள்ளது. இந்திய அமெரிக்க உறவில் முறிவு ஏற்பட்டதாக தெரிகிறது. ஆனால் அமெரிக்க பாகிஸ்தான் உறவு வலுவடைவதாக உள்ளது.


இந்தியாவுடன் முரண்படும் அமெரிக்கா, இப்போது பாகிஸ்தானுக்கு எதிராக அதன் வரிகளை குறைத்து கடைப்

> பாகிஸ்தான் இராணுவ தளபதி அசிம் முனீர் இரண்டாவது முறையாகவும் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டதுடன் ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இது பாகிஸ்தானில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் ஆழமான விவாதத்தை ஏற்படுத்தியது

பிடித்துள்ளது. அமெரிக்க வணிகங்களுக்கு ஆதரவாக உலகளாவிய வர்த்தகத்தை மறுவடிவமைக்கும் தனது அண்மைய முயற்சியின் போது, ஆகஸ்ட் முதல் நாளில் வர்த்தக ஒப்பந்த காலக்கெடுவிற்கு முன்பு, பல நாடுகள் மீது அதிக வரிகளை விதிக்கும் புதிய நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

ஆனால் அவர் பாகிஸ்தான் மீதான வரிகளை குறைத்து, முந்தைய 29 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாகக் குறைத்தார். ரஷ்யாவுடனான வர்த்தகத்தைத் இந்திய அரசு தொடர்ந்து நடத்தி வரும் நிலையில், ரஷ்யாவின் எண்ணெய் வாங்குவதற்கு இந்தியா மேல் பரஸ்பர வரிகளை அதிகரிப்பதாக ட்ரம்ப் அச்சுறுத்தி உள்ளார்.

ஏற்கனவே உயர்த்தப்பட்ட 25 சதவீத வரிகளை விட அதிகமாக, இந்தியாவில் இருந்து வரும் பொருட்களுக்கான வரிகளை கணிசமாக உயர்த்துவதாகக் கூறியுள்ளார். ஆனால் பாகிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா அதன் வரிகளை குறைத்து கடைப்பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களின் பாதுகாப்பையும் அரசாங்கம் நிச்சயம் உறுதி செய்யும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 24

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் எந்தவித பாகுபாடும் பிரிவினையும் இல்லாமல் அனைத்து மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கும் அனைத்து மக்களுக்கும் சமமான மரியாதை, அங்கீகாரம், கண்ணியம் மற்றும் மனித உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஓர் அரசாங்கமாக ஐக்கியம், மரியாதை, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதை ஆகிய கருத்துக்களை ஊக்குவிக்க நாங்கள் எப்போதும் பாடுபடுகிறோம்.

மனித உரிமைகளை மதிக்கும் கலாசாரம் சமூகத்தில் ஒரு பொது இயல்பாக மாறாவிட்டால் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், நிறுவனங்கள் எவ்வளவு எளிதில் சரிந்துவிடும் அல்லது பலவீனமடையக்கூடும் என்பதை நாம் காணலாம்.

ஓர் அரசாங்கமாக நாம் கட்டியெழுப்பியுள்ள கொள்கைகளுடன் நாம் அதனை ஆரம்பிக்கலாம். பிரிவினை, வெறுப்பு அல்லது வன்முறையை விதைக்கும் கூற்றுக்களைத் தவிர்க்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஜனாதிபதி உட்பட எங்கள் அரசாங்கத்தின் அனைத்து பிரதிநிதிகளும் இந்தக் கொள்கையை தொடர்ந்து பேணி வருகின்றனர். இருப்பை அல்லது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இனவெறி, வன்முறை அல்லது வெறுப்பைத் தூண்டுவதை நாடமாட்டோம் என்ற எங்கள் வாக்குறுதியில் நாங்கள் உறுதியாக நிற்கிறோம்.



இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம். பொதுமக்கள் உட்பட அனைவரினதும் கருத்துக்களுக்கு செவிமடுக்க நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். இதன்படி, சரியாக செயல்படவும் பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடியதாக இருக்கவும் நாங்கள் பாடுபடுவோம்"- என்றார். (எ)

# அநுராதபுரத்தில் மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

அநுராதபுரம், ஒக. 24

அநுராதபுரத்தில் கஹடட்கஸ்கிகிலிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெகிச்சாவெவபிட்டிய பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் உடுல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைவர் ஆவார்.

சம்பவத்தன்று, இவர் மாடுகளை மேய்ப்பதற்காக வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மின்னல் தாக்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' நூல் அறிமுக நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக. 24

கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசன் நூற்றாண்டை முன்னிட்டு அரசியல் ஆய்வாளர்கள், கல்விமான்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'சண்முகதாசன் நூற்றாண்டு மனப்பதிவுகள்' (தமிழிலும் ஆங்கிலத்திலும்) நூலின் அறிமுகநிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு எங்கட புத்தகங்கள் இல்லத்தில் (18/2 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்) நடைபெறுகிறது.

எழுத்தாளர் வீ.ரி. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுகவுரையை சபா. தனுஜனும் கருத்துரையை சட்டத்தரணி சோ. தேவராஜாவும் நிகழ்த்துவர். முன்னோடிகள் இலக்கிய வட்டம் (பாரிஸ்-கொழும்பு) நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கிறது. (அ)

# "சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை"

கொழும்பு, ஒக. 24

இலங்கையின் கடல் வளத்துக்கும், கடற்றொழில் துறையின் நிலைபேறான தன்மைக்கும் பாரிய அச்சுறுத்தலாக விளங்கும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, விரிவானதும் ஒன்றிணைந்ததுமான செயல்திட்டமொன்றை முன்னெடுக்க கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட கலந்துரையாடலில் கரையோர மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் கிஹான் மற்றும் ரொஷான் அக்மீமன ஆகியோரும் கடற்படை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், நாரா நிறுவனம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தி இராணுவ அதிகாரி ஒருவரும் இதில் கலந்துகொண்டார்.

இங்கு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரசேகர் கூறுகையில்,

சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்தி எமது கடல் எல்லையையும் மீனவ மக்களையும் ஒட்டுமொத்த கடல் வளத்தையும் அழிக்கும் செயல்பாட்டுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

''லைட் கோர்ஸ்', 'லைலா சுருக்கு' வலைகள் மற்றும் வெடிபொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்பு மிக அதிகம். இந்த நிலை தொடர்ந்தால், எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு கடல் பாலைவனத்தையே நாம் விட்டுச் செல்ல நேரிடும்.

கடற்றொழிலையும் மீனவ மக்களின் எதிர்காலத்தையும் பாதுகாப்பதற்காகவே இந்த உறுதியான தீர்மானங்களை எடுத்துள்ளோம்" - என்றார். (எ)

# 10 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்களுடன் இருவர் கைது!

ராகமை, ஒக. 24

ராகமை, கெந்தலியத்தபாலுவ பிரதேசத்தில் 10 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப்பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் அம்பாறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் ஹோகந்தர மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 21 மற்றும் 42 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 8 கிலோ 168 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 666 கிராம் ஐஸ் போதைப்பொருள், 3 இலத்திரனியல் தராசுகள், 4 கையடக்கத் தொலை பேசிகள், 6 போலி வாகன இலக்கத்தகடு கள், கார் ஒன்று, வான் ஒன்று, ஒட்டோ ஒன்று மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரும் வெளிநாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் தலைமையில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்து போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

## சிறுபொறிகள்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்து சமயத்தில் சத்சங்கம் என்று கூறுவார்கள். ஒரே ஆன்மீக நம்பிக்கையைக் கொன்றவர்கள் ஓரிடத்தில் கூடி கலெக்ரிவ்வாகப் பிரார்த்திப்பார்கள், தியானம் செய்வார்கள். அந்தக் கலெக்ரிவிற்றிக்கு - கூடுகி செயற்பாட்டுக்கு ஒரு சக்தி உண்டு. அது தனித்தனிச் சக்திகளை ஒன்றாகக் கூட்டித் திரட்டும். திரட்டப்பட்ட கூட்டுச்சக்தி மகத்தான ஆக்க சக்தியாக மாறும்.

இவ்வாறு சிறு சந்திப்பிடங்கள் அல்லது சமூக நொதிப்பிடங்கள் போன்றன பின்வரப் போகும் சமூக ஒட்டங்களைத் தீர்மானிக்கின்றன. பரபரப்பின்றி, பிரசித்தமின்றி, சிறியதாக, சீரியஸான தாக, ஆனால் தொடர்ச்சியானவைகளாக இருப்பவை. உண்மையும் அர்ப்பணிப்பும் தொடர்ச்சியும்தான் அவற்றுடைய பலம்.

அந்த சிறிய பொறிகள்தான் பிற்காலங்களில் பெரும் சுவாலையாக வளர்கின்றன. நோபல் பரிசை வென்ற மானுடவியலாளராகிய மார்க்க மீட் அம்மையார் கூறுவது போல "உலகை மாற்றுவதற்கான அர்ப்பணிப்புள்ள ஒரு சிறிய குழுவின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். உண்மையில், அதுதான் இதுவரை நடந்திருக்கும் ஒரே விடயம்."

## எவ்வாறு....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமூக அமைப்புக்களும் சேர்ந்து அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திடுவதற்கு தமிழரசு கட்சி மறுத்து விட்டது. தங்களுடன் முன்கூட்டியே கலந்தாலோசிக்காமல் அந்த கடிதம் தயாரிக்கப்பட்டதே அதற்கான காரணம் என்று சுமந்திரன் கூறியிருந்தார்.

ஆனால், அதே சுமந்திரன் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னதாக மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் கலந்தாலோசிக்க வேண்டிய தேவை குறித்து கவனம் செலுத்தவில்லை. இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் தமிழ் அரசியல் சமுதாயத்தை பீடித்திருக்கும் ஒரு பிணியின் வெளிப்பாடுகளாகும். தமிழ் மக்களின் நலன்களை விடவும் தங்களுக்கு இடையினான கட்சி அரசியல் மாச்சரியங்களிலும் ஆளுமைப் போட்டியிலுமே தமிழ் அரசியல்வாதிகள் தங்களது நேரத்தைச் செலவிடுகிறார்கள்.

தமிழ்க் கட்சிகளை ஐக்கியப்படுத்துவதில் அக்கறைகொண்டு இனிமேலும் எழுதுபவர்களுக்கும் பேசுபவர்களுக்கும் சித்தப்பிரமை என்று எவராவது சந்தேகித்தால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

## எதிர்க்கட்சிகளுக்கு...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரதூரமான தேசிய அக்கறைகளுடன் கூடிய சம்பந்தப்பட்ட நிலைவரங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே மாகாண ஆட்சி முறையை பெருமளவுக்கு அர்த்தமுடை தாக்க முடியும்.

ஜனநாயக முறைமை செயற்திறன் மிக்க அரசாங்கத்தையும் செயற்திறன் மிக்க எதிர்க்கட்சிகளையும் வேண்டிநிற்கிறது. தேர்தல் செயன்முறை ஊடான அதிகாரப் பகிர்வு அந்த சமநிலையை மீள்விப்பதற்கான அரசியலமைப்பு அடிப்படையிலானதும் சமாதான ரீதியானதுமான வழிமுறையை வழங்குகிறது. இந்த காரணத்துக்காக, மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதை எதிர்க்கட்சிகள் அவற்றின் அரசியல் தந்திரோபாயத்தின் மைய அங்கமாக்குவது மாற்றுவது குறித்து அக்கறையுடன் பரிசீலிக்க வேண்டும். கடந்த காலத்தில் இன, மத சிறுபான்மைக் கட்சிகளே மாகாணசபை முறையில் அத்தகைய மேம்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கோரின.

அத்தகைய மேம்பாடுகள் மத்திய அரசாங்கத்தின் அதிகார நியாயப் பாட்டை மலினப்படுத்தப் போவதில்லை, மாறாக ஜனநாயக நிறுவனங்களை பலப் படுத்தும் என்பதுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளுக்கும் விட்டுக் கொடுப்புகளுக்கும் வழியைத் திறந்து விடும். இது அரசாங்கத்துக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய தாகும். அத்துடன் அதிகாரப் பரவலாக்கம் தேசிய நல்லிணக்கத்துக்கு முக்கியமானது என்பதால் முழு நாட்டுக்குமே நன்மையாகவும் அமையும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிதீவிர...

உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக முன்னாள் ஜனாதிபதியை சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்குமாறு வைத்தியர்கள் முன்னர் பரிந்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பக்தர்களின்...

பக்தர்கள் முதல் நாளிலேயே கலந்து கொண்டு காவடி எடுத்தும் பால் செம்பு எடுத்தும் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

பதினாறு நாட்கள் இடம் பெறும் சந்நிதி முருகன் திருவிழாவில் செப்ரெம்பர் 01 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும், கைலாய வாகன உற்சவம் செப்ரெம்பர் 02ஆம் திகதி இடம்பெறவுள்ளது, சப்பை ரதத் திருவிழா செப்ரெம்பர் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தேர் உற்சவம் செப்ரெம்பர் 06 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா செப்ரெம்பர் 07ஆம் திகதியும் இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம் பெறவுள்ளமை ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

அமாவாசை அற்றுப்போகும் நேரத்தில் சந்நிதியானின் கொடியேற்றப்படும் அவ்வேளை கந்தனின் அற்புதத்தால் வள்ளிக்கொடி தோன்றும் இதனையே கொடி ஏற்ற திருவிழாவாக பக்தர்கள் கொண் டாடுவர். (அ)

## வடமராட்சி...

இடையே ஏற்பட்ட கைகலப்பு முற்றியதில் வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்டவர் மட்டக்களப்பை சேர்ந்த சின்னத்தம்பி வடிவேல் என தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## நீதியின்...

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தியே இந்த நீதியின் ஓலம் எனும்,

கையொப்பப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த போராட்டம் நேற்று காலை 10.00 மணியளவில் மாணவி கிருசாந்தி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய செம்மணிப் பகுதியில் அணையா விளக்கு போராட்டத் தூபி அமைந்துள்ள இடத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த உறவுகளை நினைவு கூர்ந்து மௌன வணக்கம் செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி ஆரம்பமான நிகழ்வில் நிகழ்வில் வடக்கின் ஏற்பாட்டுக் குழு இணைப்பாளர் ஜெயசித்திரா போராட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கையெழுத்துக்கள் பெறப்பட்டன. தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்படும்

இந்த கையொப்பப் போராட்டம், இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சட்டத்தின்...

வெலிக்கடை சிறைச்சாலை வைத்திய சாலைக்கு சென்றிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நீதிக்கான செயல்முறை மற்றும் சட்டத்தின் ஆட்சி செயல்படுத்தப்படும் நேரத்தில், சட்டத்தில் குறிப்பிடப்படாத மூன்றாம் தரப்பினரால் சட்டத்தின் இறுதி முடிவை கணிக்க முடியாது.

இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை. ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றால், சட்டத்தை அமுல்படுத்தும் முறை சரியானது என நாட்டு மக்கள் நம்ப வேண்டும்.

நான் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தேன். அவர் நலமாக இருக்கிறார். மேலும், அவரது உடல்நிலை பாதுகாக்கப்பட வேண்டும். மருந்துகள் வழங்கப்படும் என்று நம்புகிறோம்-என்றார். (அ)

## எதிரணியை...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட மற்றும் இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியுமாக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கட்சி என்ற வகையில் அருடைய கொள்ளைகளுக்கோ அவருடைய கட்சிக்கோ நாங்கள் ஆதரவானவர்கள் அல்லர். மாறாக முன்னாள் ஜனாதிபதி தொடர்பிலேயே நாம் பேசுகின்றோம். இது ஒரு அரசியல் பழிவாங்கலாகும். இது அரசியல் நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகும். அரசியல் அடக்குமுறையின் ஒரு அங்கமாகவே நாம் இதனை பார்க்கின்றோம்.

ஏனெனில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நம்பிக்கைக்குரியவராக உள்ள ஷானி அபேசேகரவே இந்த விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியாக உள்ளார். அவர் உண்மையில் குற்றம் செய்திருந்தால், நியாயமான நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் அவர் தண்டிக்கப்படுவதற்கு நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனால், விசாரணை என்ற பெயரில் விளக்கமறியல் உத்தரவை அரசியல் எதிரிகளை அடக்குவதற்கான யுக்தியாகவே இந்த அரசாங்கம் பயன்படுத்துகிறது.

இது நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மக்கள் விடுதலை முன்னணியினர் திட்டமிட்டே இந்த நாட்டின் ஆட்சியை கவிழ்த்ததா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சர்வதேச நாடுகளில் உள்ள புலம்பெயர் அமைப்புக்களின் விருப்பும் அரசாங்கத்தின் வீழ்ச்சியாகவே அமைந்துள்ளது. அதன் காரணமாகவே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு அவர்கள் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.எனவே, இந்த விடயத்தை கட்சி என்ற வகையில் முழுமையாக கண்டிக்கிறோம்.

தமக்கு ஆதரவான பாதுகாப்பு துறைசார்தோரின் ஒத்துழைப்புடன் எதிரணியில் உள்ளவர்களை சிறையில் அடைக்கலாம் என கனவு காண்பார்களாயின் இந்த தவறுகளுக்கான விலையைச் செலுத்தவேண்டிய நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

ரணில் விக்கிரமசிங்க மீது வழங்கு தொடுத்துள்ளீர்கள். ஆனால் நாட்டில் இடம்பெற்ற மிகப்பெரிய மோசடியான 323 கொள்கலன் மோசடி தொடர்பில் இன்னமும் விசாரணைகள் இடம்பெறவில்லை. அந்த விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார். (அ)

# ரணிலின் கைதின் ஊடாக நீதி நிலை நாட்டப்பட்டது!

## அமைச்சர் சந்திரசேகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 24



ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருக்கின்றார். இந்த கைது தொடர்பாக பலரும் பல விதமான கருத்துக்களை சொல்லி வருகின்றனர். எங்களுடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது, உண்மையிலேயே மக்களுடைய பணத்தை வீண் விரயமாக்குவதை தடுத்து நிறுத்தி, மக்களுக்கு கூடுதலான சேவைகளை செய்து வருகின்றது என கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைசசர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைதின் மூலம் இந்த நாட்டிலுள்ள நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

பனை அபிவிருத்தி சபையால் பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் நேற்று யாழ். சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

பனை அபிவிருத்திச் சபை தலைவர் ஆர்.ரவீந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கடற்றொழில் மற்றும் நீரியல் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட பனை அபிவிருத்தி சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அமைச்சரால் பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதோடு, கண்காட்சியையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரசிங்க மாத்திரமல்ல இன்னும் பலர் உள்ளே செல்லக்கூடியவர்களாக இருக்கின்றனர். கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி இந்த நாடு வங்குரோத்து அடைந்த நாடு என அறிவிக்கப்பட்டது.

வங்குரோத்து என அறிவிக்கப்பட்ட நாட்டில், தங்களுடைய அப்பாவின் சொத்து என நினைத்து, மக்களுடைய பணமான 166 இலட்சத்தை வீணடித்துள்ளனர். சட்டவிரோதமாக பயன்படுத்தியுள்ளனர். அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

அதனுடைய விளைவாகவே அவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றார். இதுவரை இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் உயரத்தில் இருப்பவர்கள், மேட்டுக்குடிகள், அவர்களிடையே நெருங்க முடியாது எனக் கூறப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் பெரிய நரியர், பெரிய தந்திரக்காரர், பெரிய மூளைசாலி, பலசாலி, அவருக்கு பின்னால் உலகமே இருக்கின்றது எனக் கூறி, ரணில் விக்கிரமசிங்க மீது கை வைக்க முடியாது என்றெல்லாம் கூறப்பட்டது.

ஆனால், நாங்கள் அவர் மீது கை வைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

இதுநாள் வரை நாட்டின் சட்டத்தை இந்த நாட்டிலுள்ள மேட்டுக்குடிகள் தங்களுடைய பைகளுக்குள் வைத்திருந்தனர். ஆனால், இன்று நீதித்துறை சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலைக்கு வந்துள்ளது. நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதற்கான அனுமதி மற்றும் சுதந்திரத்தை வழங்கியுள்ளோம்.

அந்த சுயாதீன நீதிமன்றம், சுயாதீனமாக விசாரணை செய்து, மக்களுடைய பணத்தை கொள்ளையடித்தது யாராக இருந்தாலும், அவர்களுடைய தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த நடவடிக்கையின் ஒன்றாகவே, முழு நாட்டில் இருக்கின்ற பழைய அரசியல்வாதிகள், நாட்டில் கொள்ளையடித்தவர்கள் என எல்லோரும் நடுங்குகின்ற அல்லது அச்சமடைகின்ற ஒரு கைதாகவே இந்த ரணில் விக்கிரமசிங்கவின் கைது அமைந்துள்ளது-என்றார்.

## ரணிலுக்காக...

கொழும்பில் உள்ள பிளவர் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக தொடர்ந்து குரல் கொடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள, பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, மனோ கணேசன், பி.திகாம்பரம், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் ருவான் விஜேவர்தன, அகில விராஜ் காரியவசம், வஜிர அபேவர்தன, சகல ரத்நாயக்க, சுகீஸ்வர பண்டார மற்றும் பல எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரும் இதை ஆதரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று நடைபெறும் ஊடக சந்திப்பில் அவர்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்றாலும், முன்னாள் ஜனாதிபதிகள் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவுள்ள தாக தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டில் இருப்பதாகவும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கலந்து கொள்ளப் போவதில்லை என்றும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரணிலுக்கு...

உடல்நிலையை கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## அரச...

செயல்முறை தொடர்பான பிரச் னைகள் உட்பட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## மாங்குளத்தில்...

தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மூதாட்டியிடமிருந்து நகை உள்ளிட்ட பொருட்களை களவாடுவதற்காக வெட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

## அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்கிறது அரசாங்கம்

### மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 24

அரசியல் பழிவாங்கல்களைத் தவிர அரசாங்கத்தால் வேறு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என ரணில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிட்டு நலம் விசாரிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று சிறைச்சாலை வைத்தியசாலைக்கு சென்றிருந்தார்.

இதனையடுத்து ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த- சிறு குற்றங்களுக்காக அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படுவது வருத்தமளிக்கிறது.

தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மக்களிடமே வினவவேண்டும்.

மக்கள் சரியான புரிதலைக் கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் பழிவாங்கும் செயல்களைத் தவிர வேறொன்றும் இல்லை.

மக்கள் தங்களை நேசித்து வருகின்றனர். நாங்கள் மக்களை நேசிக்கிறோம் - என்றார். (அ)

## ரணிலின் கைதானது நாட்டுக்கு அபகீர்த்தி

### திலித் ஜயவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி ஒருவரை கைது செய்துள்ள விடயம் சர்வதேசத்தின் மத்தியில் எம்முடைய நாட்டின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ளதாக சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பார்வையிட்டமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மருத்துவ அறிக்கைகளின்படி அவரின் உடல்நிலை நன்றாக இல்லை என்று தெரிகிறது.நான் அவரது நலம் குறித்து கேட்டேன். அவர் என் அரசியல் நண்பர் அல்லர். உண்மையில் அவர் அநுரகுமாரவின் அரசியல் நண்பர். நீண்ட காலமாக இருவரும் நெருங்கியவர்களாக வேலை செய்தார்கள்.

நான் எப்போதும் அவர்களின் அரசியலை ஒருவித புரிதலுடன் நடந்த அரசியலாகவே பார்த்தேன்.இது நமது நாட்டின் அரசியலை ஒரு புதிய திசைக்கு அழைத்துச் செல்லும் என்று நான் கருதுகிறேன்.

நான் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியலை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போதும் கூட ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் என் தேசிய அரசியலுக்கு எதிரானவர். ஆனாலும், இந்த நாட்டின் ஜனாதிபதி யை இப்படி நடத்தப்படுவது தவறு. நீதித்துறையின் நடவடிக் சரியா தவறா என நான் கூறவில்லை. ஆனால் இந்த முறையே கைகள் நமது நாட்டின் நற்பெயருக்கு சிறந்த விடயமல்ல.. எனவே, பல்வேறு அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும், அவற்றைத் தாண்டி நாட்டை நேசிக்கும் மக்கள் ஒன்றிணைந்து தாய்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் அழைக்கிறேன்.

அத்துடன். நானும் கூட ரணிலை சிறையில் அடைத்து காண்பிக்குமாறு சவாலிட்டேன். ஆனால் தற்போது தொடுக்கப்பட்டுள்ள வழக்கிற்காக அல்ல. மாறாக அவர் மீது மத்தியவங்கி பிணை முறி மோசடி உள்ளிட்ட பாரிய ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கூறினர். அவற்றில் கவனம் செலுத்தாது லண்டனில் டிரான்சிட் ஆன விடயத்திற்காக வழக்கு தொடுத்திருக்கின்றமை குறுகிய மனநிலையை எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. இது நாட்டை உலகின் முன் குறுகிய நிலைக்கு இட்டுச்செல்லும் -

எதிர்க்கட்சியின் தவறுகளால் தான் மூன்றில் இரண்டு பெரும்பாண்மையுடன் இந்த அரசாங்கம் ஆட்சியமைத்துள்ளது. மாறாக அவர்களுடைய திறமையால் அல்ல. எனவே இவை திருத்தப்பட வேண்டும். இந்த நாட்டின் பொதுமக்களின் நலனுக்காக எந்த புள்ளிகளில் நாம் ஒன்றிணைகின்றோமோ அதற்காக எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். அதற்கான அழைப்பை விடுக்கின்றேன் - என்றார். (அ)

# சமஷ்டி தீர்வு என்பது பிரிவினைவாதமல்ல!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



கொழும்பு, ஓக. 24

**அரசாங்கம் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் அல்ல. அது தொடர்பில் கலந்துரையாடல் என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கூறும் வரை யில் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அரசாங்கம் வித்தியாசமானது என்ற அடிப்படை நம்பிக்கையாவது வளர்க்க தொடங்குங்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைகள் பிரச்னைகள் தொடர்பான விசேட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தமிழரசுக் கட்சியானது 1949ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து சமஷ்டி என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வரும் கட்சியாகும். ஆனால் இந்தப் பிரேரணையில் தமிழரின் இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பான சமஷ்டி என்ற கருத்து வலியுறுத்தப்படவில்லை.

அண்மைக்காலமாக தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் அந்த நிலைப்பாட்டில் இருந்து விலகியுள்ளதாகவே எங்களின் குற்றச்சாட்டு உள்ளது.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அவ்வாறான குற்றச்சாட்டை குறிப்பிடக்கூடியவர் அல்லர். எனினும் இந்தப் பிரேரணையானது அந்தக் கொள்கையை தவிர்த்திருப்பது எங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கின்றது.

கடந்த தேர்தலில் சமஷ்டிக்கும் மற்றும் பொறுப்புக்கூறலில் சர்வதேச விசாரணைக்காகவே ஆணையை பெற்றது. ஆனால் சர்வதேச விசாரணையும் இந்தப் பிரேரணையில் தவிர்க்கப்பட்டுள்ளமை ஆச்சரியத்தை கொடுக்கின்றது.

ஏன் இதனை குறிப்பிடுகின்றேன் என்றால், இந்த அரசாங்கம் பக்கச்சார்பற்ற விசாரணையை நாங்கள் செய்வோம் என்றே கூறுகின்றது. கடந்த 70 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தின்படி இலங்கையின் இனப்பிரச்னை இனவாதத் தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது என்று அரசாங்கமே கூறுகின்றது. அப்படியெனில் கடந்த 76 வருடங்களாக இயங்கிய அரச கட்டமைப்பில் தமிழர்கள் நம்பிக்கை வைக்க முடியுமா?

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாக பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் கடந்த வாரத்தில் குமணன் என்ற ஊடகவியலாளர் அழைக்கப்பட்டு அவரிடம் 7 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இராணுவம் கொலைகளை செய்கின்றது.

இந்த அரசாங்கத்திலேயே இது நடக்கின்றது. இந்த அரசாங்கம் அந்த மனோநிலையில் இல்லை என்று கூறினாலும் அது நடப்பதற்கான காரணங்கள் உள்ளன.

அந்த மாற்றங்களை செய்வதற்கு இந்த அரசாங்கம் நேர்மையாக செயற்படத் தயாராக இருந்தாலும் இந்த அரசாங்கம் நிரந்தரமாக இங்கிருக்கப் போவதில்லை. ஜனநாயகத்தை கடைப்பிடிக்கும் அரசாங்கமாக இருந்தால் அரசாங்கம் மாறும். இருந்தவர்கள் இனவாதிகள் என்று இவர்களே கூறுகின்றனர்.

கடந்த 76 வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு எப்படி கிடைக்கும். ஜே.வி.பி. அல்லது என்.பி.பியை நிரந்தரமாக ஆட்சியில் வைப்பதன் ஊடாக மட்டுமே அதனை செய்யலாம்.

தமிழ் மக்கள் கண்மூடிக்கொண்டு அவர்களுக்கு வாக்களித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதே தீர்வு. தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு கிடைக்காதா? யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு இனவாதம் பாயாது, பயங்கரவாத தடைச்சட்டம் பாயாது என்ற பாதுகாப்பு அவசியமல்லவா?

எமது தேச அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது என்றால் அந்த தேச அடையாளத்தை அங்கீகரித்து நாங்களும் இந்த தேசத்தில் நிரந்தரமானவர்கள் என்பதனை அங்கீகரிப்பதில் என்ன தவறு உள்ளது. எனது சொந்த வீட்டில் என்னுடைய பிரச்னையை கையாழுவதில் என்ன பிரச்னை உள்ளது.

நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றோம். ஏன் அதை மறுக்கின்றீர்கள். உங்களின் வாயால் அந்த வாக்குறுதியை வழங்காமல் இருக்கின்றீர்கள். இதனை இந்த அரசாங்கம் செய்வதற்கு தயாராக இல்லை.

கடந்த 76 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பயன்படுத்திய அதே சொற்பதற்களை இந்த அரசாங்கம் பயன்படுத்த முடியாது. ஆனால் அதுதான் இன்னும் நடக்கின்றது. இங்கு தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதில் என்ன தவறு?

தென்னிலங்கை மக்கள் கடந்த 76 வருடங்களாக நடந்த அரசியலை கைவிட்டுள்ளனர். அதனால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். அந்த நிமிடத்தை நாங்கள் கைவிடக் கூடாது. இது திரும்பவும் வரப்போவதில்லை. உங்களுக்கு அந்த சந்தர்ப்பம் உண்டு. உங்களை முற்றிலும் வித்தியாசமான தரப்பாக சிங்கள மக்கள் பார்க்கின்றனர். இவ்வளவு காலங்களிலும் இன வாதிககள் என்று நீங்களே குறிப்பிடுபவர்கள் கடந்த காலங்களில் செய்தவை அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்துவதில் சிங்கள மக்கள் உள்ளனர்.

இதனால் உங்களுக்கு ஒரு கடமை உள்ளது. அதாவது தமிழ் மக்கள் கூறும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

நீங்கள் சமஷ்டியை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சமஷ்டி பிரிவினைவாதம் அல்ல என்ற உண்மையை நீங்கள் கூற வேண்டும். அந்த விவாதத்தை வெளிப்படையாக நடத்தலாம் என்று நீங்கள் கூறலாம். 76 வருடங்களாக சிங்கள மக்களுக்கு கூறிய பொய்களை இன்றும் நீங்கள் திருத்தாமல் இருக்கின்றீர்கள்- என்றார்.

## ரணிலின் கைதுக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு முன்னாள் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தமது சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில் நாட்டை சரிவிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவே மீட்டார் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சமூக ஊடக செயற்பாட்டாளர் ஒருவர் கணித்ததாக கூறப்படுவதற்கு அமைய, ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி சமூக ஊடக செயற்பாட்டாளர் சுதத்த திலகசிறிக்கு எவ்வாறு முன்கூட்டியே தெரியும் என பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

## வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற முடியாத நிலையில்!

### நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 24

தற்போதைய அரசாங்கம் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இவ்வாறான செயற்பாடுகளால் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி ஒருவர் தமது பதவி காலத்தில் எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org